பொதுப் பாடல்கள்

(323 - 421)

பொதுப் பாடல்கள்

எண்	பாடல்	எண்	பாடல்
323	அகர முதலென	343	ஊனுந தசை
324	அடியார் மனது	344	ஊனே றெலும்பு
325	அதல சேடன	345	எட்டொடெரு
326	அப்படியே	346	எதிரொருவ
327	அமல வாயு	347	எழுதரிய
328	ஆசார வீனன	348	எழுபிறவி
329	ஆசை கூர	349	எனபந்த வினை
330	ஆரவாரமா	350	ஏட்டிலே வரை
331	ஆராத காதலாகி	351	ஒழுகூனிரத்த
332	ஆராதனராட	352	ஓதுமுத்தமிழ
333	ஆவி காய்பது	353	கடலை பயறொடு
334	ஆதை ஞான	354	கருப்பற்றா
335	இசைந்த ஏறும்	355	கருப்பையிற்
336	இத்தரணி மீதிற	356	கவடு கோத்தெழு
337	இரவோடும பக	357	காதி மோதி
338	இருநோய் மலத்தை	358	குகையில் நவ
339	இருந்த வீடும	359	குருதி தோலினில்
340	இனமறை விதத	360	கொடிய மத
341	உலகத்தினில	361	சந்தம புனைந்து
342	உறவின முறை	362	சமய பதி

எண	பாடல	எண	பாடல்
363	கருவிய சாத்திர	383	நரையொடு பற
364	கலமல மசுத்த	384	நாரரலே தோல்
365	சாங்கரி பாடி	385	நாவிரணடித
366	சிவஞான புண்டரி	386	நாளு மிகுத்த
367	சீதமலம் வெப்பு	387	நித்தமுற்றுனை
368	சுட்டது போலானை	388	நிமிர்ந்த முதுகுங்
369	சுருதி வெகுமுக	389	நிருதராக்
370	சூதிஞுண வாசை	390	நீருமெய்ப்பு தோலி
371	செழுந்தாது	391	நிலங்கொள்
372	ஞான விபூஷணி	392	நெடிய வட
373	தசையு முதிரமு	393	பகிர நினைவொடு
374	தத்தனமு	394	பட்டுப் படாத
375	தரணி மிசை	395	பரவைக் கெத்தனை
376	தலைவலை போக	396	பருதியாய்ப்
377	தவநெறி தவறிய	397	பாணிக்குட
378	திரிபுரமதனை	398	பிறவியலை
379	திரைவஞ்ச	399	புகரில் சேவல.
380	துளாருமத	400	புத்தகத
381	தோரண கனக	401	புவிகுண பாத
382	தோவதத்தியா	402	பூத கலாதிகள்

எண்	பாடல்
403	பெருங்காரியம்
404	பேரவா வரு
405	பொதுவதாய
406	போத நிர்குண
407	மக்கள் தாயா
408	மதனை விய
409	மதிதனையிலாத
410	மன கபாட
411	மனைமக்கள
412	மாண்டா ரெனு
413	முருக மயூர
414	முனையழிந்தது
415	மூவாதிலமதின
416	மோது மறலி
417	வாதந் தலைவலி
418	வாரி மீதே யெழு
419	வானைபபுக்கு
420	வேடர் செழுந்தினை
421	வேத வித்தகா

பொதுப் பாடல்கள்

திருப்புகழ் பதம்- விளக்கம்

		பக்கம்
1	துரிய முடிவை- துரியாதீதம் ...	105
2	மாசான நரவெண் வகைதனை ...	105
3	யமனை மோதி ...	105
4	வாராதி- சப்தமாதர்கள் ...	105
5	ஆவாகன மாமந்திரத்து ...	105
6	அந்த நாளில- நானகு நிகழ்ச்சிகள் ...	106
7	திசையில் நின்ற நாகம் ..	106
8	குறமறவர் கொடி அடிகள் .	106
9	முயலகனின் மீதாடுவார் . .	106
10	தெக்ஷிண செவிதனில் ...	106
11	தவம், மாதவங்கள் பயில் ...	106
12	அகில வாதிகளும் ...	107
13	அறுசமய சாத்திரப ...	107
14	கற்பகத் தோப்பு ..	107
15	மால் கொண்ட பேதை ...	107
16	புரிபிழை பொறுக்கும் சாமி ...	108
17	மாயை ...	108

(323) கரஹரப்ரியா (35) (-) /4/4/40 கண்டநடை ①

அகர முதல என உரை செய ஐமபத்தொரு அக்ஷரமும்,
அகில கலைகளும், வெகு விதம் கொண்ட தத்துவமும்,
அபரிமித சுருதியும் அடங்கும் தனிப் பொருளை, எப்பொருளும் ஆய
அறிவை அறிபவர் அறியும் இன்பம் தனைத், துரிய
முடிவை, அடி நடு முடிவுஇல் துங்கந்தனைச், சிறிய
அணுவை அணுவினின், மலமும், நெஞ்சம், குணத்ரயமும்
அற்றது ஒரு காலம

நிகழும் வடிவினை, முடிவில் ஒன்று என்று இருப்பதனை,
நிறைவு குறைவு ஒழிவு அற நிறைந்து எங்கும் நிற்பதனை,
நிகர பகர அரியதை விசும்பின புரத்ரயம்
எரித்த பெருமானும்

நிருப குருபர குமர என்று என்று பத்தி கொடு
பரவ, அருளிய மவுன மந்த்ரந்தனைப் பழைய
நினது வழி அடிமையும் விளங்கும்படிக்கு இனிது
உணர்த்தி அருள்வாயே

(1)

அகரம் முதலெழுத்தாகக் கூறப்படும் ஐம்பத்தொரு அக்ஷரங்களையும், சகல கலைகளையும், பல வகைய உண்மைப் பொருள்களையும், எண்ணரிய மறைப் பொருள்களையும், தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கும் ஒப்பற்ற பொருளே, எல்லாப் பொருள்களுமாய் விளங்கும்,

(அறிவை) ஞானநிலையை அறிந்தவர்கள் அறிந்து அனுபவிக்கும் இனிப்புப் பொருளே, (துரிய முடிவை) யோகியர் தன்மயமாய் நிற்கும் உயர் நிலையில் விளங்கும் முடிவுப் பொருளே, அடி-நடு-முடிவு இம்மூன்றும் இல்லாத (துங்கம் தனை) உயர் பொருளே. (சிறிய அணுவினின் அணுவை) சிறிய அணுவுக்கும் அணுவாய் விளங்கும் பொருளே (ஆணவம் கன்மம், மாயை எனப்படும்) மும்மலங்கள், மனம், புத்தி, அகங்காரம் சித்தமாதிய கரணங்கள், சத்துவம், இராசதம், தாமதம் எனப்படும் முக்குணங்கள் இவைகள் யாவும் நீங்கின ஒப்பற்ற காலத்தில் விளங்குவதான சொரூபத்தை, யுகாந்த காலத்தில் முடிவுப் பொருளாய் 'ஒன்று' என்று திகழும் பொருளே, நிறைந்தது, உறைந்தது, நீங்கும் தன்மையது எனும் சப்தமே இல்லாது நிறை பொருளாய எங்கும் நிற்கும் பொருளே, (நிகர்) அதற்கு இணை இது என்று சொல்லுதற்கு அரிதாய் திகழும் பொருளே (விசும்பின்) ஆகாயத்திலே பறந்து திரிந்த முப்புரங்களை எரித்த சிவபெருமானும்,

"அரசே! குருமூர்த்தியே! குமர மூர்த்தியே" என்றெல்லாம் பக்தியுடனே போற்றின போது, அவருக்கு நீ உபதேசித்தருளிய மௌனோபதேச மந்திரத்தை, உன்னுடைய பழைய வழியடிமையாகிய அடியேனுக்கும், விளக்கந்தரும் வகையில், இனிமையாக உபதேசித்து அருள புரிவாயாக

தகு தகுகு தகுதகுகு தந்தந தகுத் தகுகு
டிகு டிகுகு டிகுடிகுகு டிணடிண டிகுக்கு டிகு
தகு தகெண கெணசெகுத தந்தந தரிந்தகுத தததகு தீதோ
தனதனன தனதனன தநதந் தனததன
டுடுடுடு டுடுடுடு டுண்டுணடு டுடுடுடு
தாரரர ரிரிரிரி என்று என்று இடகையும் உடுக்கையும் யாவும்
மொகு மொகு என அதிர, முதிர அண்டம் விளக்க, நிமிர்
அலகை கரணம் இட, உலகு எங்கும் பிரமிக்க, நட
முடுகு பயிரவர் பவுரி கொண்டு இன்புற, பல
களத்தில அரு கோடி

முது கழுகு, கொடி, கருடன் அங்கம் பொரக், குருதி
நதி பெருக, வெகு முக கவந்தங்கள் நிர்த்தம் இட
முரசு அதிர திசசரை வென்று இந்திரற்கு அரசு
அளித்த பெருமாளே.

---

(324) ஸாமா (5½) 324 ⊖ $1+1\frac{1}{2}+1\frac{1}{2}+1\frac{1}{2}$

அடியார் மனம் சலிக்க எவராகிலும் பழிக்க
அபராதம் வந்து, கெட்ட பிணி முடி

தக தகுகு தகுகுகுகு - - - - - - தத்த தகு தீதோ ②

தன தனன - - - - - - - - தரரரர ரிரிரிரிரி என்று
பலமுறை திடகை என்னும வாதத்தியமும், உடுக்கையும்
பிற எல்லா வாத்தியங்களும்

மொகு மொகு என்னும பேரொலியுடன அதிர்ச்சியுற முழங்க, பழமை
யாயுள்ள அண்டங்கள எல்லாம் அந்த அதிர்ச்சியால் பிளவு பட்டு
வெடிக்க, நிமிர்ந்து நின்று பேய்க் கூட்டங்கள் (கரணம் இட) கூத்து
வகைகளை ஆட, உலகில் உள்ள யாவரும் திகைத்து மயங்க, நடனம்
வேகத்திற புரியும் பயிரவ மூர்த்திகள் (பவுரி) மண்டலமிட்டுக கூத்
தாடி மகிழ, அசுரர்கள் (பட) இறந்து படும் போர்க் களத்தில 3/6
கோடிக் கணக்கான

வயது முதிர்ந்த கழுகுகளும், காக கைகளும், கருடன பருந்தாதிய
பறவைகளும், (பிணங்களின்) அங்கங்களைக் கொத்தித் தாக்க,
ரத்த ஆறு வெள்ளம் பெருக, பல வகையான தலையற்ற உடல்கள
கூத்தாட முரசு வாத்தியம பேரொலி எழுப்ப, அசுரர்களை ஜெயித்து
தேவேந்திரனுக்கு விண்ணுலக ஆட்சியைத தந்த பெருமானே -

---

(324) 324

அடியார்களுடைய மனம கலிப்புறும்படி - துன்பப்படும்படி - யாராகி
லும பழித்தால், அதனால் பிழை ஏற்பட்டு, கெட்ட நோய்கள்
வந்து பிடித்து - சுற்றிக் கொண்டு

அனைவோரும வந்து சிச்சி என நால்வரும சிரிக்க
அனலோடு அழன்று செத்து விடுமா போற்
கடையேன் மலங்கள் மூறும்,இரு நோயுடன்,பிறத்த
கலியோடு இறந்து சுத்த வெளியாகிக

களி கூர என்றனுக்கு மயில ஏறி வந்து முத்தி
கதி ஏற அன்பு வைத்து உன் அருள்தாராய
சடை மீது கங்கை வைத்து விடை ஏறும் எந்தை சுதத
தழல மேனியன சிரிதது நா புறம் மூன்றும்
தவிடாக, வந்து எதிர்த்த மதன ஆகமும் சிதைத்த
தழல் பார்வை அன்று அளித்த குருநாதா

மிடி தீர அண்டருக்கு,மயில் ஏறி வஞ்சா கொட்டம்
வெளியாக,வந்து நிர்த்தம் அருள்வோனே

மின நூல் மருங்குல பெறபு முலை மாது இனம் குறத்தி
மிகு மாலொடு அன்பு வைத்த பெருமானே-

---

(325) பிருந்தாவன சாரங்கா (5½) 325 (ட) 1½+1½+1+1½

அதல சேடனா ஆட, அகில மேரு மீது ஆட,
அபின காளி தான ஆட அவளோடு அன்று

(3)

எல்லாரும் வந்து சீ சீ என்று அருவருப்புடன் இகழ, நாயும் பேய் பரிக
சித்துச் சிரிக்க. வெம்மையால் கொதிப்புற்று இறந்து விடுவது போல்,
கடைப்பட்டவனாகிய என்னுடைய மும்மலங்கள் யாவும், இறப்பு பிறப்பு
எனப்படும் இரு நோயுடனும், என்னைப் பிடித்துள்ள (கலி) தரித்தி
ரத்தோடும் அழிபட்டு. ஞான பரிசுத்த பரவெளி புலப்பட்டதாகி
மகிழ்ச்சி மிக்கு எழ என் பொருட்டு மயில் மீது நீ ஏறி வந்து முத்திவீட்டை
நான் அடையுமாறு என் மீது அன்பு வைத்து உன் திருவருளைத் தந்தருளுக.
சடையின் மீது கங்கையைச் சூடி, விடை மீதேறும் எந்தை, பரிசுத்தமான
நெருப்பு மேனியர், சிரித்து, ஒப்பற்ற புரங்கள் மூன்றும்
தவிடு பொடியாகவும், வந்து தன்னை எதிர்த்த மன்மதனுடைய உடலைச் சாந்து
அழியுமாறு செய்த (சிவனது) நெருப்புக் கண் அன்று தந்த (நெருப்புக்
கண்ணினின்றும்) அன்று வெளிப்பட்ட குருநாதனே!
தேவர்களுக்கு (மிடி) துன்பம் நீங்க, மயில் மீதேறி, வஞ்சகர்களாம்
அரக்கர்களின் இறுமாப்பும் சேஷ்டையும் தொலைய, கருணையுடன்
எழுந்தருளி வந்து நடனம் புரிந்தவனே!
மின்னல் போலவும், நூல் போலவும் நுண்ணிய இடையையும் அழகிய தனங்
களையுமுடைய மாது இளம் குறத்தி வள்ளியின் மீது மிக்க ஆசையுடன்
அன்பு வைத்த பெருமானே

325

(325)

கீழுலகத்திலே உள்ள ஆதிசேஷன் ஆடவும், (அகில மீது) பூமி மீதுள்ள
மேருமலை ஆடவும் சிவத்திற்கு அன்னியமில்லாதவளாகிய காளிதேவி ஆடவும்
அவளுடன் அன்று (பின்னம் வேற்றுமை, அபி(ன்)ன வேற்றுமையின்மை)

(4)

அதிர வீசி வாதாடும் விடையில ஏறுவார் ஆட,
அருகு பூத வேதாளம் அவை ஆட

மதுரவாணிதான் ஆட மலரில் வேதனார் ஆட
மருவும வானுளோர் ஆட மதி ஆட

வனச மாமியார் ஆட நெடிய மாமனார் ஆட
மயிலும் ஆடி, நீ ஆடி வர வேணும்

கதை விடாத தோள் வீமன எதிர கொள் வாளியால் நீடு
கருதலார்கள மா சேனை பொடியாகக்

கதறு காலி போய் மீள விஜயன் ஏறு தேர் மீது
கனக வேத கோடு ஊதி அலைமோதும்

உததி மீதிலே சாயும உலகமூடு சீர் பாத
உவணம் ஊர்தி மாமாயன் மருகோனே

உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜன
உளமும் ஆட வாழ் தேவா பெருமானே.

(5)

அவ்வகையில் மேலுலகம் ஏழும், கீழுலகு ஏழும், (வழாது) தவறுதலின்றி வகையில (வகுத்து) படைத்து, (போதினின் மிசை) தாமரை மலரினும், (அகரம) முதன்மைத தானமான, (வியோக கோளகை மிசை) அண்ட கோள திலும வாழகின்றவரும,

எழுத்துக்குத் தேவியான சரஸ்வதிக்குத் (கோவின்) தலைவருமான பிரமதேவர் இட்ட விதிப்படி பிறப்புகள் மாறி மாறி, எல்லா உருவையும் கொண்ட உடல்களை முறையே நான் எடுத்து

இவ்வாறாக (எண்பதது நானகு ஆறுயிரமாம) யோனிபேதங்களிலும் (உற்பவியா) தோன்றிய பிறந்தும் (விழா) பின்னர் இறந்தும், (இங்ஙன உலகில் தடுமாற்றம் அடைந்தே, அலைகின்ற காலம்

எத்தனை ஊழி காலம் என்று தெரியாது, (இறைவனே) நீ வாழவாயாக இனியேனும் நான் பிறவா வண்ணம் நீ அருளபுரிவாயாக

(கறபகம) தென்னை (வேழம) கரும்பு இவைகளுக்கு உயபாக (நீண்டு வளரந்துள்ள) பசிய இளந் தினைகள உள்ள புனததில் வீற்றிருந்த கறபு நிறைந்த மாது வள்ளி அணைதரும் அழகனே!

பசசைக கற்பூர (தூளி லேபன) பொடிப் பூச்சு அணிந்துள்ளவனும், மல் யுததத்துக்கு ஏற்ற புயத்தை உடையவனுமான (பாக சாதன இந்திரனுடைய கறபக விருக்ஷங்கள் உள்ள பொனனுலகை (தார ரக்ஷித்தவனே! மலைககூட்டததில விளஙகுபவனே!

அந்தணர் கூட்டத்தில் இருப்பவனே! வேதததில் உள்ளவனே! மேற்புறத்தி உள்ள விண்ணுலகின காவலனே! வெட்சியும் கடமப மாலையும அணிபவ (நீர) நிரமபிய கடல சேறு படபெழ, எழுகிரியும் சூரனும் பொடி பட ழியப பராகரமம் பொருந்திய வேலைச் செலுததின பெருமானே!

உலகமெல்லாம அதிரும்படி கர சரணங்களை வீசித் (நெருக்கம் (4)
செய்து போட்டியிட்டு) நடனம் செய்தவரும், இடப வாகனருமான
சிவபெருமான் ஆடவும, அவருக்கு சமீபத்தில் அவரைச் சூழ
நின்று பூதங்களும், பேய்களும் ஆடவும்

இனிய வீணகானம் புரியும சரஸ்வதி ஆடவும், தாமரையில் வீற்
றிருக்கும் பிரமன் ஆடவும், பொருந்தியுள்ள விண்ணவர்கள் ஆடவும்
சந்திரன் ஆடவும்

செந்தாமரை மலரில் வீற்றிருக்கும (உனது) மாமியாராகிய இலக்குமி
தேவி ஆடவும், விசுவரூபம் எடுத்த உனது மாமனாராகிய திருமால்
ஆடவும், (நீ ஏறி வரும்) மயிலாடவும், நீ நடனம் புரிந்து வரவேணும்

கதாயுததை எப்போதும் தோளில வைததுள்ள பீமசேனன்
எதிர்த்துச் செலுத்தின பாணப்ரயோகத்தில் பெரிய பகைவர்க
ளின் பெரும சேனைகள் பொடிபட (உதவினவரும்)

கதறிச் சென்ற (காலி) பசுக்கூட்டங்கள் போனவை மீண்டு வரப
புல்லாங்குழலை ஊதினவரும், அர்ச்சுனன் ஏறிச் சென்ற தேர்
மேல் பாகனாயிருந்து, பொன மயமானதும் வேத ஒலியைத் தருவ
துமான (கோடு) சங்கத்தை ஊதினவரும், அலை மோதி வீசும்

(பாற்) கடலிலே பள்ளி கொளபவரும், உலகத்தையே அளந்து
முடின திருவடியை உடையவரும, (உவணம்) கருடனை வாகன
மாகக் கொணடவரும் ஆன சிறப்புற்ற (மாயன்) திருமாலின் மருகனே!

அலர்ந்த மலர் மாலையை அணிந்த மார்பினனை பிரபுட தேவ
மகாராஜனுடைய உள்ளம நெகிழ்ந்துருகும வண்ணம் அவனது
உள்ளத்தில் வாழ்கின்ற தேவர்கள் பெருமானே.

அபபடி ஏழும் ஏழும், வகுத்து வழாது, ணோதினின
அகராம வியோம கோளகை மிசை,வாழும்

அகர தேவி கோவின விதிப்படி மாறி மாறி, அ
னைத்து உருவாய காயமது அடைவே கொண்டு

இப்படி யோனி வாய தொறும் உற்பவியா விழா உல
கிற் தடுமாறியே, திரி தரு காலம்

எத்தனை ஊழி காலம் எனத் தெரியாது, வாழி,
இனிப் பிறவாது நீ அருள் புரிவாயே

கற்பகம் வேழம் ஐ வன பக்கிள ஒன்ற மீது உறை
கற்புடை மாது தோய தரும அபிராம

கறபுர தூளி லேபன மற்புய பாகசாதன
கற்பக லோக தாரண, கிரி சால

விப்ர சமூக, வேதன, பசிம பூமி காவல
வெட்சியு நீப மாலையும் அணிவோனே

மெதிய ஆழி சேறெழ வெற்பொரு சூரன நீறெழ
விகரம வேல ஏவிய பெருமானே

(6)

மாசு அற்ற பிராண வாயு (ஓடாத) மேற்கொண்டு செல்லாதபடி
மூலாதார கமலத்தின் மீது ஒடுங்க வைத்து (மூல) அங்ஙனம் செய்த
தின் மூலமாக, அமுத பானம் பருகும்படி, மூலாக்கினி சுடர் விட்டு எழ
(மனம், வாக்கு, காயம் இவை மூன்றும்) அசைதலில்லாமலும் சலன
மில்லாமலும் - (பேராத விதமும் மேவி) அந்த சமாதி நிலையினின்
றும் நெகிழாதபடி ஒரு நிலையில் இருந்து (ஓவாது) அந்த நிலையி
னின்றும் நீங்காமல, (அரிசம் அதான) மகிழ்ச்சி தருவதான (ஒ) அரிசு
அதான) தேன போன்ற, (சோபானம அதனலே) படிப்படியாக மேலேறும்
யோக- சிவயோக- முறையாலே

யமனையும் தாக்குவது போல மேலெழுந்து, ஆகாசம வரைக்கும் பறந்து
செல்லும் மனோபாவம மிகவும் எளிதான வகையில் அடைந்து,
மேலெழுந்து அகங்காரததுடன் பேசுகின்ற

எனதுடையது என்னுடையது என்னும் மமகாரமும், நான் நான் என்னும்
அகங்காரமும (புறபபறறு, அகப்பற்று இரண்டும்) பெருகி-நீங்கி,
பிறர் யாவரும், பிற பொருள்கள் எவையும், யானே எனுமம
அருமையுடன் பாவிக்கும். உயர் நிலையை அடைந்து விளங்குவதான
மனோபாவத்துக்கு எட்டாத பெருநிலையைத் தந்தருளுவாயாக

மலமில்லாதவராகிய (பரிசுத்தமான) உமாதேவியாருடைய (தொடி: வளையல்
வளையல் அணிந்த திருக்கரத்தினின்றும் மேலெழுந்து ஓடி வந்த யமுனை
நதிபோலவும், ஒப்பற்ற எழு (விபுத) எங்கும் வியாபிக்கும தன்மை
வாய்ந்த மேகங்களைப் போலவும், ஏழு உலகங்களின்

பரப்பையும் காணவல்ல பெருமை மிக்க திருமால, அண்டங்கள முழுமையும
அடும்படி விசுவரூபம எடுததது போலவும பல திசைகளின் அளவுகளும ஆகாய
அளவுகளும ஓடிச் சென்று

327 யமுனா கல்யாணி (5½) (1½+1½+1+1½)

அமல வாயு, ஓடாத கமல நாபி மேல் மூல
அமுத பானமே, மூல அனல் மூள
அசைவுறுது, பேராத விதமு மேவி, ஓவாது
அரிசதான சோபானம் அதனிலே

எமனை மோதி ஆகாச கமனமாம் மனோபாவம
எளிது சால, மேலாக உரையாகும்

எனது யானும் வேறிதி எவரும் யாதும் யானெனும்
இதய பாவன அதீதம் அருள்வாயே.

விமல தோடி மீது ஓடு யமுனை போல, ஓர் எழு
விபுத மேகமே போல, உலகு எழும்

விரிவு காணும் மா மாயன் முடிய நீருமா போல
வெகு விதா முக அகாய பதம் ஓடி

(7)

கமல யோனி வீடு ஆன ககன கோள மீது உறை
கலப நீல மாயூர இளையோனே

கருணை மேகமே, தூய கருணை வாரியே, ஈறு இல்
கருணை மேருவே, தேவ பெருமாளே.

---

(328) ஆமை விநோதினி (6) 328 1+½+1½+2

ஆசார ஈனன அறிவிலி கோபா(அ)பராதி அவகுணன்
ஆகாத நீசன அநுசிதன விபரீதன

ஆசா விசார, வெகுவித மோக ஆசரித, பரவசன
ஆகாச நீர மண் அனல், வளி உருமாறி

மாசான நாலைந் வகை தனை நீநான் எனுத அறி(வு) உளம்
வாயாத பாவி இவன் என நினையாமல்

மாதா பிதாவின் அருள் நலம் மாறு மகாரில் எனை இனி
மாறான போதம் அருள் செய நினைவாயே

(திருமாலின உந்தித) தாமரையில உதித்த பிரமாவின (வீடான) இடமான விணணில உள்ள மணடலத்தின மீதும் தோகையை விரிப்பறந்து ஒடுகின்ற நீலத தோகை மயில வாகனனே! இளையோனே! கருணையை மேகம் போல பொழிபவரே! பரிசுததமான கருணைக் கடலே! முடிவிலாத கருணைப் பெருமலயே! தேவர்கள பெருமானே.

328

ஆசாரக குறைவு உடையவன, அறிவில்லாதவன், கோபம காரணமாய் குற்றம் பல செய்பவன கெடட குணத்தை உடையவன் (துர்க்குணன்) யாருக்கும் ஆகாத இழிந்த தனமையுடையவன், தகாத காரியங்களைச் செய்யும அசுத்தன, (விபரீதன்) மாறுபாடான புத்தியை உடையவன் மூவாசைகளிலேயே எணணததைச செலுததுபவனாய், பல விதமான ஆசைச செயலகளைக் கைக்கொணட (பரவசன) தன வசம இழந்தவன் விண் நீர், மண், தீ, காறறு எனப்படும் பஞசபூதக கலப்பால் உருவம மாறி மாறி (வெவ்வேறு உடம்பெடுத்து)
குற்றங்களுடன் கலந்த (நாலெண 4×8=32) குணப்பண்பு (27) தொழிற்பண்பு (5) ஆகிய முப்பத்திரணடு குணங்களைக் கொணட இநத உருவங்களை, நீ என்பதும் நான் என்பதுமான பிரிவைக காணாத ஞான உள்ளம வாயகப் பெறாத பாவி-இவன என்று (என்னை) நினைத்து ஒதுக்கிவிடாத தாய தநதையரின் அருள நிறைநத உபகாரச் செயல்கள்(மாறு) நீங்கு தல் இல்லாத (மகாரிய) குழநதைகளைப் போல (தாய் தநதையரின் அன்பும அருட செயலகளும நீஙகாத குழந்தைகள போல) என்னை (உன குழந்தையாகிய என் மீது, இனிமேலாயினும் அம்மையப்பனாகிய நீ அருள் பாலிதது சிறந்த ஞானோபதேசததை உபதேசித்து அருள செயவதற்கு திருவுள்ளததில நினைத்தருளுவாயாக

வீசால வேலை சுவறிட, மா தரர் மாயு தொளைபட
வேதாள ராசி பசி கெட அறை கூறி

மேக ஆரவாரம் என, அதிர் போர், யாது தானர், எம புரம்
மீதேற, வேல் கொடு அமர செயும் இளையோனே

கூசாது வேடன், உமிழ் தரு நீராடி, உவன் உண் எனும் உரை
கூறு, மன ராய, அவன துகர் தரு சேடம

கோது ஆம எனமல் அமுது செய் வேத ஆகம ஆதி முதல் தரு
கோ, லோக நாத, குறமகள் பெருமாளே

---

(329) யமுனா கல்யாணி (8) 329 (ம) ஆதி

ஆசை கூர பத்தனேன் மனோ பதம
மான பூ வைத்து நடுவே, அன்
பான நூல் இட்டு நாவிலே சிதர
மாகவே கட்டி, ஒரு ஞான
வாசம வீசி பரகாசியா நிற்ப
மாசு இல் ஓர் புத்தி அளிபாட

(விசால) பரந்த கடல் வற்றிப் போகவும், பெரிய சூராதிகளின் மார்பு தொளைபடவும், வேதாள கணங்களின் பசி தணியவும் (போருக்கு வாருங்கள் என) அசுரர்களைக் கூவி அழைத்து
மேகங்களின் பேரொலியோ இது என்னும்படி முழங்கும் போரில் (யாது தானர்) அரக்கர்கள் யம பட்டணம் போய்ச்சேரும்படி, வேல் கொண்டு அமர் புரிந்த இளையோனே
அருகாது வேடன் கண்ணப்பன், வாயினின்றும் உமிழ்ந்த நீர் அபிஷேகத்தைப் பெற்று, இந்த ஊன் சுவைப்புளது இதை உண்டருள் என்னும் சொல்லைக் (கூறு) கூறி, (முன் ஏய) நிரம்பக் கொடுத்த அந்த வேடன (நுகர் தரு) எச்சில் செய்து கொடுத்த (சேடம்) பாகம் குற்றம் ஆம், தகாது, என்று பாவிக்காமல், (அமுது செய்) உண்டவரும் வேதங்களுக்கும், ஆகமங்களுக்கும் ஆதி முதல்வருமான சிவபெருமான (தரு) பெற்ற (கோ) கோவே, தலைவனே! உலகங்களுக்கு நாதனே! குறமகள் வள்ளியின் பெருமானே!

329

(329)

(உன் மீது) ஆசைமிக்க பக்தியுள்ள நான், மனம் எனப்படும் தாமரை மலரை வைத்து நடுவே - இடையில் - அன்பு எனகின்ற நாரைக் கொண்டு, நாவினிடத்திலே அழகாகவே ஒரு மாலையைக் கட்டி, (அந்த மாலை மீது) ஒப்பற்ற ஞான வாசம், ஞானம் எனனும் நறுமணத்தை வீசித் தடவி, அந்த மாலை ஒளியுடன் விளங்கவும், (அந்த மாலையில்) குறைவில்லாத ஒரு புத்தி - அறிவு - எனகின்ற (அளி) வண்டு மொய்த்துப் பாடவும் (இவ்வாறு)

மாத்ருகா புஷ்ப மாலை, கோல, ப்ர
ஆன பாதத்தில் — அணிவேனே
மூசு கானத்து மீது வாழ முத்த
மூரல் வேடிச்சி — தனபார

மூழ்க, நீப ப்ரதாப மார்ப அந்த,
மூரி வேழத்தின் — மயில் வாழ்வே

வீசு மீனப் பயோதி வாய் விட்டு
வேக, வேதித்து — வரு,மா சூர்

வீழ மோதிப், பராரை நாகத்து
வீர வேல் தொட்ட — பெருமானே.

330 கேதாரம் (24) 330 ஆதி-திஸ்ர நடை- 2 களை
ஆரவாரமாய் இருந்து, ஏம தூதர் ஓடி வந்து
ஆழி வேலை போல் முழங்கி — அடாவார்கள்
ஆக மீதிலே இவந்து உன்சி தானுமே நுழைந்து
ஆலை மீதிலே கரும்பு — எனவே தான
வீரமான சூரி கொண்டு, நேரை நேரையே பிளந்து
வீசுவார்கள், கூக என்று — அழுபோது

(9)

மாதருகா மந்த்ர மாலையான, பூ மாலையை (கோல) அழகிய, (ப்ரவாள)
பவளம் போற் சிவந்த திருவடியில் அணியும் பாககியத்தைப் பெறுவேனோ!
வண்டுகள மொய்க்கும் காட்டிலே வாழ்ந்திருந்த, முத்துப் போன்ற
அழகிய (மூரல்) பற்களைக் கொண்ட வேடுவப் பெண் வள்ளியின்
கொங்கைப் பாரத்தில்
மூழ்குகின்ற. (நீப ப்ரதாப) கடப்ப மாலையைச் சிறப்புடன் அணியும்
திருமார்பையுடைய (அத்த) தலைவனே! (மூரி) வலிமையையுடைய,
ஐராவத ஆனை வளர்த்த மயில் அனைய தேவ சேனையின் கணவனே!
மீன்களை அலைகளில் வீசி எறியும் (பயோதி) கடல, 3வலி செய்து
வெந்து வற்றவும், (வேதித்து வரு) தேவர்களை வருத்தி வந்த,
பெரிய சூரன்
மாண்டு விழத் தாக்கி (பராரை) பருத்த அடிபாகத்தை உடைய, (நாகத்து)
மலையாகிய கிரவுஞ்சத்தின்மீது வீரம் பொருந்திய வேலாயுதத்தைச்
செலுத்தின பெருமானே!

330

ஆடம்பரமாய காலங்கழித்து வரு நாளில், எம தூதாகள் ஓடி அருந்து
(ஆழி வேலை) வட்டமான கடலைப்போலப் பேரொலி செய்து, (என்னை)
(அடர்வாரகள்) நெருங்கி வருத்துவாரகள்,
(என்னுடைய) உடலிலே கோபததுடன் ஊசியைக குததி துளைத்து, கல
யில வைதத கருமபு என்று சொல்லும்படி (அடடிக ககககி)
வீரம பொருநதிய சூரிககததி கொண்டு, செவ்வையாகப் (பாதி
பாதியாகப) பிளந்து எறிவார்கள, (இஙஙனம் மரண வேதைப் படுவேன)
(வீடடில உளளோா) கூகு எனறு அழுது கொணடிருக்கும் பொழுது

வீடு வாசலான பெண்டிர, ஆசையான மாதா வந்து
மேலே வீழ்வர், ஈது கண்டு வருவாயே

நாசி, வீரி, சூரி, அம்பை, வேத வேதமே புகழ்ந்த
நாதர் பாவிலே இருந்த மகமாயீ

நாடி ஓடி ஆற அனபா காண வேணதே புகழ்ந்து
நாலு நாலுமே புகன்ற வரை மாது
நீரின் மீதிலே இருந்த நீலி சூலி வாழ்வு, மைந்த
நீப மாலையே புனைந்த குமரேசா

நிலகை ஓடி வந்த சூரை வேறு வேறு கண்ட
நீதனை(த்) தேர் குழந்தை பெருமாளே

---

(331) திலங் (7½) 331 (ம) 1+½+½+½+2

ஆராத காதலாகி, மாதர் தம்
ஆபாத சூடம(ம) மீதிலே, விழி
அலோலமுய, விகாரமாகி இளைசியாலே

ஆசா பசாசு மூடி மேவிட
ஆசார ஈனன ஆகியே மிக
ஆபாசனகி ஓடி நாளும அழிந்திடாதே

வீடு வாசலில் உள்ள பெண்டிர்களும், என் மீது அன்பு கொண்டுள்ள (10)
மாதர்களும் வந்து என் உடல் மீது வீழ்வார்கள், இக்கோலத்தைக்
கண்டு நீ வந்து அருள்புரிவாயாக
தேவி, வீரமுள்ளவள், (சூரி) அச்சத்தைத் தருபவள் - மாகாளி -
அம்பிகை, எல்லா வேதங்களும் புகழ்கின்ற தலைவராம் சிவ
பெருமானிடத்தே இருக்கும் தேவி பார்பதி
தன்னை விரும்பி நாடி வருகின்ற அன்பர்கள் கண்டு நிரம்பப் புகழ்ந்து
நாள் தோறுமே துதித்த மலைமகள்
கடல் நீரில் பள்ளி கொண்டிருக்கும் நீல நிறத்தி வைஷ்ணவி,
கலாயுதத்தை ஏந்தினவள் ஆகிய பார்வதிக்கு வாழ்வாய்
அமைந்த - செல்வமாய அமைந்த (மைந்த) பிள்ளையே! கடப்ப
மாலையை சூடியுள்ள குமரேசனே!
கொடியவனை நாடி வந்த சூரபத்மனை, துண்டம் துண்டமாகப்
பிளந்தெறிந்த (நீதனை) நியாய மூர்த்தியான ஒப்பற்ற குழந்தைப் பெருமானே

331

அடங்காத மோகம் கொண்டு பெண்களுடைய உள்ளங்கால் முதல்
உச்சந்தலைவரைக்கும் உள்ள அங்கங்களின் அழகில், கண்ணுல
கலங்குதல் கொண்டவனாய் - ஈடுபட்டவனாய் - (விகாரமாகி) மனம்
கலக்கம் அடைந்தவனை (இலக்ஷியாலே) குணவிசேஷத்தால
(அல்லது) உந்தியிலே
ஆசை என்ற பேயின் தன்மை என்னைக் கவர்ந்து ஆட்கொள்ள
(நான்) ஆசாரம் குறைவு பட்டவனாய் மிகவும் அசுத்தனாகி
(அங்கும் இங்கும்) ஓடி நாளுக்கு நாள் கெட்டழியாதவாறு

ஈராறு தோளும் ஆறு மாமுக
மேறோடு அரு நீப வாச மாலையும்
ஏறு ஆன தோகை நீல வாசியும் அன்பினாலே.

ஏரேழும் ஓதுமாறு தீது அற
நாண் ஆசு பாடி ஆடி நாள்தொறும்
ஏடேறுமாறு ஞான போதகம் அன்புறுதோ

வாராகி, நீள கபாலி, மாலினி
மாமாயி, ஆயி, தேவி, யாமளை,
வாசாமகோசரா, பராபரை இங்குள் ஆயி

வாதாடி, மோடி, காடு காள், உமை,
மாஞால வீலி, ஆல போசனி,
மாகாளி, சூலி வால், யோகினி அம்பவாணி

சூராரி, மா புராரி, கோமளை
தூளாய பூதி பூசு நாரணி,
சோணாசல, ஆதி லோக நாயகி, தந்த வாழ்வே
தோளாறும வாளினாலும், மாறிடு
தோலாத வான நாடு குறைகொள்
சூராரியே விசாகனே சுரா தம்பிரானே

(உனது) பன்னிரு தோள்களையும், ஆறு திருமுகங்களுடனே (அருள்)
நிறைந்துள்ள – திருமார்பிலே பொருந்தியுள்ள, (வாசநீப மாலையும்)
மணம் கமழ்கின்ற கடப்ப மலர் மாலைகளையும், உயர்ந்த நீல நிறம்
பொருந்திய மயிலாகிய குதிரையையும், அன்பு பூண்டு,

பிறமக்களும் – உலகிலுள்ள யாவரும் – போற்றிப் புகழுமாறு (அவர் தம்)
கேடுகள் ஒழிய, நான் ஆசு கவிகளைப் பாடியும், ஆடியும், நாள்
தோறும் கடைத்தேறுமாறு (நீ எனக்கு) ஞான உபதேசம் செய்ய
என் மீது அன்பு கொள்ள மாட்டாயோ!

வாராகி, பெரிய கபாலத்தை ஏந்தினவள், மாலையை அணிந்தவள் (அல்லது)
கங்கையாகத் திகழ்பவள், பெரிய மாயையைச் செய்பவள், உலகங்
கட்கு அன்னையாகத் திகழ்பவள், (தேவி) ஒளி மயமானவள், பச்சை
நிறமுடையவள், வாக்குக்கு எட்டாதவள், பெரிய பொருளாகியவள்,

(உள் இங்கு ஆவி) உள்ளத்திலே இங்கு தங்குகின்ற தாய்,
(இறைவனுடன்) காளியாய் வாதாடினவள், (நோடி) துர்க்கை,
(காடுகாள்) வன தேவதை உமை, பெரிய பூமியிலே (ஆக்கியும்,
அளித்தும், அழித்தும்) லீலைகள் புரிபவள், ஆலகால விஷத்தை
உண்டவள், மஹா காளி), சூலாயுதத்தை ஏந்தியவள், பாலாம்பிகை
யோக சக்தியாக விளங்குபவள், அழகிய பவானி

(மகிடா)சுரனுக்கு (அரி) பகையானவள், பெரிய திரிபுரத்தை எரித்தவள்,
அழகி திருநீறாகிய விபூதியைப் பூசும் நாரணி, திருவண்ணமலையில்
ஆதி லோக நாயகி ஆகிய பார்வதி அளித்த செல்வமே!

தோள் கொண்டும், வாள் கொண்டும், பகைமை பூண்டவனும், தோல்வியே
இல்லாதவனும், பொன்னுலகைச் சூறையாடினவனுமான சூரனுக்குப்
பகைவனே! விசாகனே! தேவர்கள் தம்பிரானே!

(12)

(332) கீரவாணி (7) (ல) 1300

ஆராதனர் ஆடம்பரத்தும், மாறுது சப அவம்பனததும
அவாகன மா மந்திரதது மடவாலும்

அருள் தெச மாமண்டபததும், வேதாகமம் 3தும தவத்தும்,
அமாறு எரிதாம இந்தனத்தும் மருளாதே

நீராளக நீர் மதசனதத நீள் தாரக - வேதணட மத்த
நீநான் அற வேறு இன்றி நிறக நியமாக

நீ வா என நீ இங்கு அழைதது, பாராபர அநநத சிதகி
நேரே பரம அனந்த முகதி தரவேணும்

(12)

பூஜை செய்வோர்களின் டம்பத் தோற்றங்களைக் கண்டும் (மாறாது) இடை விடாது செய்யும், ஜபத்தில் உள்ள பற்றுக்கோடு- ஆசையினாலும்- (ஆவாகன) தெய்வம் எழுந்தருள வேண்டி எழுதப்படும் சிறந்த மந்திரத்தைக் கொண்ட தகட்டை- தாயத்து வகைகளைக் கண்டும்

ஆறும் பத்தும் கூடிய- பதினாறு கால் கொண்ட- சிறந்த மண்டபக் காட்சியாலும், வேதம். ஆகமம் இவை முழங்கும் இடத்தைக் கண்டும், யாகாதிகளுக்கு ஆகும்படி எரிபாயும் சமித்து- (ஆல், அரசு அத்தி. கல்லால மா. பலாசு வன்னி நாயுருவி. கருங்காலி என்பனவற்றின் சுள்ளி) ஆகிய ஹோம விறகைக் கண்டும்,

பிரமித்து அவைகளில் மருட்சி கொள்ளாமல்- மயங்காமல்

நீராளம- நீர் மிகுதி. பெருகும் அடியார்களின் கண்ணீரிலே (மஞ்சனத்த) அபிஷேகம் கொள்பவனே! (கண்ணீர் முழுக்காட்டில் மகிழ்பவனே) நீள் தாரக சிறப்பு மிக்க தாரக மந்திரத்துக்கு- 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்துக்கு உரியவனே! வேதண்ட: மலைகளுக்கு உரியவனே! (மத்த) அதிகம் உற்சாகம் கொள்பவனே! [வேதண்டம் அத்த: மலைகளுக்கு உரிய தலைவனே) நீ என்றும் நான் என்றும் உள்ள துவைத பாவம் நீங்கி அத்துவித நிலையைப் பெற, நீ வேறு நான் வேறு என்னும் வேற்றுமையில்லாது நிற்பதற்கு, (நியமாக) அனியம் இன்மையாக- உறவுடனே- சொந்தமாக (அல்லது நியமமாக நிச்சயமாக, முறைமைப்படி -

நீ வா என்று என்னை நீ இவ்விடத்திலேயே அழைத்து, கரையில்லாத கடல் போன்ற ஆனந்த நிலையைக் கூட்டுவித்து (நேரே) உடனே பரமானந்த நிலையதாம் முத்தி) நலத்தை தந்தருள வேணும்

வீர ஆகர சாமுண்டி, சகர பாரா கண பூதம் களிகத

வேதாள சமூகம் பிழைக்க அமா் ஆடி.

வேதா முறையோ என்று அரற்ற ஆகாச கபாலம் பிளக்க

வேர் மா மர மூலந் தறித்து வடவாலும்

வாராகரம் ஏழும் குடித்து மா தரொடு போர் அம்பு அறுதது

வாரண ஆசன மேலும் துணிதத கதிரவேலா

வானை அரசாளும்படிக்கு வாவா என வா என்று அழைத்து

வானோர் பரிதாபம் தவிர்த்த பெருமானே

333

(333) ஆரபி (5½) (ம) ½+2+2

ஆவி காப்பது மேவ பதம் ஆதவால் புருடார்த்தம்

இது ஆம் எனப பரமார்த்தமது உணராதே

ஆனை தேற் பரி மேற பல சேனை போற்றிட வீடொடு

அநேக நாடொடு காடொடு தமோறி

பூவை மார்க(கு) உருகாப் புதிதான கூதொடு பாடொடு

பூவின நாறறம அருத் தன கிரி தோயும்

போக போகய கலாதநொடு வாழ பராகமொடு (இ)ராபபகல

போது போகதி என் ஆக்கையை விடலாமோ

வீரத்திற்கு உறைவிடமாகிய காளியும், வளவாகப் (சகர யுகமாக)

பெருங்கூட்டமாகிய பூதங்களும் மகிழ்ச்சியடையவும், பேயக கூட்டங்கள (பிணங்களை உண்டு) பிழைக்கும் வழியும் போர்புரிந்து

பிரமன (ஒலம்) என்று முறையிட்டுக கூச்சலிட, அண்ட கூடம் பிளவுபட, மாமரமாய நின்ற சூரனின அடி வேரையே வெட்டி (வடவா)

வடவா முகாக்கினி (ஆலும) தங்கியுள்ள

கடல் ஏழையும் குடித்து பெரிய சூரனுடனே, அவன் போரிலே செலுத்தின அம்புகளை அறுத்து, பாணங்களுக்கு ஆசனமான - தங்குமிடமான - விலலையே மேலும் வெட்டித தள்ளின கதிரவேலனே

தேவாகள் தமது பொன்னுலகை அரசாளும்படிககு, வாருங்கள், வாருங்கள் வாருங்கள் என்று அழைத்து தேவாகளுடைய

பரிதவிக்கத் தகக நிலையை - துக்கத்தை - நீக்கின பெருமானே.

333

உயிரைக் காத்து உய்விப்பது மேலானதொரு (முதம) பக்குவச் செயல் ஆதலால், புருஷார்த்தம (அறம், பொருள், இன்பம், வீடு எனப்பட்ட) உறுதிப்பொருள்கள் இது ஆம் (என) என்று உணர்ந்து (பரமார்த்தமது) மேலான உண்மைப் பொருளைத தெரிந்து கொள்ளாமல்

யானையின் மேலும், குதிரையின் மேலும், பல படைகள் போற்றி செய்ய, வீட்டிலும், பல நாட்டிலும், காட்டிலும் (உலவித) தடுமாறுதல் உற்று

மாதர் மயக்கில் உருகி புதிய புதிய கூத்துடனும் பாட்டுடனும் மலர்களின் நறுமணம் நீங்காத கொங்கை மலைகளில் தோய்கின்ற

இன்பம் அனுபவிப்பதிலும் உடலகளிலும் வாழுகின்ற (பராதகொடு) வினையாட்டவகளிலே இரவும பகலும பொழுதைப் போககி எனது உடலை விட்டுப் போதல நன்றோ? (நன்றன்று என்றபடி)

தேவி பாாப்பதி சேர் பர பாவனர்கடு 3ரு சாகர
அதித தீகை பரீகைகள் அற ஓதுந்

தேவ, பாற்கர, நாற்கவி பாடு லரனை, மோக
தியாக. ராத்திகழ் கார்த்திகை பெறுவாழ்வே

மேவினர்க்கு அருள தேகடு, துவாதச அக, கடாக்ஷர,
மேரு விழ்த்த பராக்ரம வடிவேலா

வீர, ராகக்தர் ஆர்ப்பு எழ, வேத தாசகன நாக் கெட
வேலை கூப்பிட வீக்கிய பெருமாளே

334

(334) குருடபு (9) (1+1½+1½+1½+1½+2)

ஆதை கான புதியைக் கொடுததும,
ஆராயு நூலகளிற கருதது அளிததும
ஆதேச வாதவினிற பரமித்து கிளைதது உயிர அழியாதே

ஆசா பயோதியைக் கடகக விடடதும்
வாசா மகோசரத்து இருததுவிததும்
ஆயாதனேன பிகபரசிதது பெறறு கினிது உலகு ஏழும்

தேவி பார்வதி சேர்கின்ற மேலான (பாவனர்க்கு) பரிசுத்த மூர்த்தியாம் சிவனுக்கு (ஒரு) ஒப்புற்ற (சாக்கிர அதீத) ஆன்மா தத்துவங்களுடன் கூடி நிற்கும் நிலைக்கு மேற்பட்டதான (தீக்ஷை பரீக்ஷைகள்) உபதேசங்களையும், உபதேச விளக்கங்கள் முழுமையும் ஓதின தேவனே! (ஞான) சூரியனே! நால்வகைக் கவிகளையும் (சம்பந்தராய்) பாடின (லக்ஷண) அழகு வாய்ந்தவனே! வீடு பேறு அளிக்கும் கிருபா மூர்த்தியே! இரவில் விளங்கும் கார்த்திகை மாதர்கள் பெற்ற செல்வமே விரும்பி உன்னை அடைந்தவர்க்கு அருள் நிரம்ப வழங்கும், பன்னிரு கண்களை உடையவனே! ஆறு திருவெழுத்துக்கு உரிய மூர்த்தியே! கிரவுஞ்ச மலையை அட்ட பராக்ரமசாலியே! வடி வேலனே!

வீரனே! அசுரர்களின் அலறும் கூச்சல் எழவும், வேதத் தலைவனும் பிரமனது (நா) சொல (கெட) ஒடுங்கவும், (பொருள் கூறத் தெரியாது மயங்கிப், பேசுதற்கு இலாது சிறையிற் படவும்) வேலை கப்பிட-கடல் ஜ்வலமிட்டுக் கலங்கவும் (வீசிய) (வேலாயுதத்தை) வேகமாகச் செலுத்தின பெருமானே!

334

என்றும் கெடாத/நீங்காது நிறைந்த, ஞான அறிவைக் கொடுத்ததையும் ஆராய்ந்து அறிய வேண்டிய நூல்களில் (ஆராயும்) கருத்தைக் கொடுத்ததையும், (அதேச) ஒரு வழியாக நிலைத்திராத/திரிபு உள்ள வாழ்க்கையில் மயங்கித் திகைத்து இளைத்து உயிர் அழிந்து போகாமல்

ஆசையாகிய கடலைக் கடக்கும்படியான ஆற்றலைத் தந்ததையும் வாக்குக்கு எட்டாத ஒரு நிலையில் என்னை இருக்கும்படி வைத்து அருளியதையும் மிகவும் கீழ்ப்பட்டவனாகிய நான் மிக்க கீர்த்தியைப் பெற்று, இனிமையுடன், உலகில் உள்ளவரும் உள்ளவையும்

யானக, நாம அற்புதத் திருப்புகழ
தேன ஊற ஓதி எத்திசைப புறத்தினும்
ஏடு ஏவு ராஜதததினைப் பணித்ததும் இடர் ஆழி

ஏறுத மா மலதரய, குண த்ரய,
நாள விகார, புறபுதப பிறபபு அற
ஏது ஏமமாய எனககு அநுகரகிதததும மறவேனே

மா நாக நாண வலயய உறத் துவக்கி ஓர்
மாமேரு பூதரத் தநுப் பிடிதது ஒரு
மாவாய வாளியைத தொடுத்து அரககரில ஒரு மூவர்

மாளாது, பாதகப புரதரயதத வர்
தானாகவே, முதற் சிரிதத வித்தகா
வாழவே, வலாரி பெற்றெடுத்த கறபக வனமேவும்
தே நாயகா எனத துதிதத உத்தம
ஆனடா வாழ, விகரமத் திருக்கழல
சேராத சூரனைத துணித்து அடககிஅ வரை மோதி

நானே எனும் அத்துவித நிலையைப் பெற்று, (நாம) கீர்த்தி கொண்டதும அற்புத வகையில அமைநதுள்ளதுமான திருப்புகழப் பாவைத் தேன ஊறின கினிமையுடன (ஓதிப) பாடி, எல்லாத் திசைகளில் உள்ள ஊர்களிலும், நான் எழுதி அனுப்பும் ஒரு - கடிதமோ. பாடலோ- மரியாதையுட னும் அன்புடனும போற்றப்படததகக (ராஜதத்தினை) பெருமிதத்தை, மேன்மையை (பணித்ததும்) எனககு அருளிச் செய்ததையும் - தந்தருளியதையும். துன்பக் கடலினின்றும்

கரையேறமுடியாத பெரிய மும்மலங்களும், முவகைக குணங்களும், பலவிதமான கலககங்களும (காமம், குரோதம், உலோபம், மோகம் மதம், மாற்சரியம் இடும்பு அசூயை எனும எணவகைபபட்ட துர்க்குணங்களும்), கூடியதும் நீர்க்குமிழி போல தோனறி மறையும தனமையுள்ளதுமான பிறபபு நீங்கும வகைககு (ஒம ஒதுவாய) இனபமான நிகழ்ச் சியாய- இன்பந்தரும வரமதாக எனக்கு அநுககிரகத்தையும நானறும் பெரிய வாசுகி என்னும் பாமபாகிய (நாண்) கயிற்றை பலமாகக் கூடியுள்ள (ஒ)ப்பற்ற மகாமேரு மலையாகிய வில்லை பிடிதது. ஒப்பற்ற திருமாலாகிய (வாளி) அம்பைத் தொடுதது, (திரிபுரத்தில் இருநத) அசுரர்களில மூவர் மட்டுமே தப்ப மாத்திரம

இறநது போகாமல், பாவச் செயலகளில் ஈடுபட்டிருநத முபபுரத்து அசுரரகள (எரிபட்டுப்) பொடியாய் விழ, (முதல்) முன்பு புன் சிரிப்புச் சிரிதத ஞான வடிவனராகிய சிவ பெருமானது செல்வமே! (வலாரி) - தேவேநதிரன அடைநது வளர்த்த கறபக வனம் (மேவும்) உளள (தேம) தேசத்துககு - பொன்னுலகுககுத் தலைவனே! என்று துதி செயத உததமாகளாகிய தேவாகள வாழ, பராகரமம பொருநதிய உனது

சேறு ஆய சோரி புகுடு அளக்கா திட்டு எழ
மாறு நிசாசரக குலத்தை இப்படி
சீராவினல் அறுத்து அறுதது ஒதுக்கிய பெருமானே.

(335) ரீதி கௌளை (12) 335 (-) 14400

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில் நீறும
இலங்கு தாளும, புலியதள் ஆடையும, மழு, மானும்
அசைந்த தோடும், சிரமணி மாலையும் முடி மீதே

அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குரு நாதா
உகந்த சூரண கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசம் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போது எனதுயர் கெட மாமயில் வர வேணும்

அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமானே

(336) அடாணவேரி (8) 336 (-) 3/4 ஆதி

இத்தரணி மீதிற் பிறவாதே
எத்தரொடு கூடிக கலவாதே
முத்தமிழை ஓதித் தளராதே

திருவடியைச் சிந்தித்துப் போற்றுத. சூரனை வெட்டி அடக்கி
அந்த கிரவுஞ்ச மலையை மோதிச
சேறு போனற ரத்தம் (புககு) பாய்வதால் (அளககர்) கடலும்
(அல்லது பூமியும்) திடர்-மலைமேடு போல் எழ, (மாரு) மாருக
பகைத்து நின்ற அசுரர் கூட்டத்தை. உடைவாளால், அறுத்து
அறுத்து- துண்டு துண்டாக அறுத்து, ஒதுக்கித் தள்ளின பெருமானே

335

(தம் மனத்துக்கு) உகந்த ரிஷப வாகனமும், யானைத்தோல போர்வையும், அழகிய
விளங்கும் பூணூலும், புலித்தோல் ஆடையும், மழுவும், மானும் (திருநீறும்
அசைந்து விளங்கும் தோடும (மணி சிர மாலையும) அழகிய தலை
மாலையும், முடியின மேலே
அணிந்துள்ள சிவபெருமான் அன்புடன் விரும்பின குருமூர்த்தியே!
உயர்ந்த சூரன, சுற்றத்தாருடன் அடியோடு தொலையக் கோபித்தவனே
தங்களுக்கு மகிழ்ச்சி தரும் (பாசக் கயிறுடன்) யம தூதுவர் என்னை வருத்தாமல்,
நான சோர்வு உற்றிருக்கும் சமயத்தில், என துயரம் ஒழிய
உனது அழகிய மயில் மீது நீ வரவேணும்
அழகாய் அமைந்து விளங்கும் வேலைத் திருப்புயத்தின் மீது வைத்துள்ள (பெருமானே

336

இந்தப் பூமியிலே பிறவாமலும்
வஞ்சகர்களுடன் கூடிக் கலந்து கொள்ளாமலும்
மூன்று தமிழ்களையும் படித்துப் படித்துச் சோர்வு அடையாமலும்

புத்தி அடியேனுக்கு அருள்வாயே
தத்துவ மெய்ச் ஞானக குருநாதா
சுத்த சொரூபா, புத் தமுதோனே
நித்திய க்ருதா, நற் பெரு வாழ்வே
நிர்த்த, ஜெக ஜோதிப் பெருமானே

---

(337) தர்பாரி கானடா (7½) 337 (✓) 1½+2+4

இரவொடும் பகலே மாறாதே
அநுதினம் துயர் ஆயாதேயே
எரியும உந்தியினாலே, மாலே பெரிதாகி
இரை கொளுமபடி, உடலே பாடே
மிகுதி கொண்டு, உழியாதே வாதே
இடைகளின சில நாளே போயே வயதாகி

நரைகளும பெரிதாயே போயே
கிழவன் என்று ஒரு பேரே சாரவே
நடைகளும் பல தாறே மாறே விழலாகி
நயனமுந் தெரியாதே போனால்
விழுவது என்று, அடியேனே தானே
நடன குஞ்சித வீடே கூடாது அழிவேனே
திருநடம புரி தாளீ, தூளீ
மகர குண்டலி, மாரீ சூரீ

முத்தியை அடியேனுக்கு அருள் புரிவாயே.
உண்மைப் பொருளாய மெய்ஞ்ஞானத்த (உபதேசிகக வல்ல) குருநாதனே
ஒலி உருவத்தனே! புதிய அமுதம் போன்றவனே!
நித்திய வாழ்வை- மோக்ஷத்தைத்-தருபவனே! நல்ல பெருஞ் செல்வமே!
ஆடல புரியும் பெருமானே! ஜெகத்தில்- உலகத்திலே ஜோதியாய்
விளங்கும் பெருமானே!

337

இரவும் பகலுமாக (மாறுதே) நீங்குதலின்றி- எப்போதும்-(அநுதினம்)
நாள் தோறும் துக்கம் (ஓயாதே) ஓய்தலின்றி [யே-ஏ-அசை) இடை
விடாமல் பீடிக்க, தீப்போல எரிகின்ற வயிற்றுல்,- பசி எனனும் அக்கினி
யால- ஆசைகளே பெரிதாய வளர்ந்து (அதனல)
உணவு வேணடி (ஊடே) வாழ்க்கையினூடே - வாழ்விலே- (ஊடே) உழைப்பே,
வருத்தமே அதிகமாக அடைந்து (வாதே ஓழியாதே) துககம வேசுதலிலேயே
நீங்குதல இலலாமல்- எப்போதும காலம் கழிதது- (இவ்வாறு வாழ்க்கையின
மத்தியிலே சில காலம கழிந்த (பினபு) வயதாகி
நரைகள அதிமாகிய போய, கிழவன் என்று பேரே (சாரவே) வந்து கூடிட
நடையும நேரினறிக கோணலாய் தாறுமாறுக நடந்து, கீழே விழுந்து
விடுவதாய
கணகளும தெரியாமல குருடானல எனது ஆணவ இருள எனறு தான்
நீஙகுவது! அடியவனுகிய நான், திருநடம் புரிகின்ற (குஞ்சித) வளைநத
திருவடியாகிய மோக்ஷ வீட்டை அடையாமலே அழிந்து போவேனே!
திருநடனம புரிகினற திருவடிகளை உடையவள, திருநீறுதனை அணிந்துள்ள
மகர மீன குண்டலஙகளை அணிந்துள்ளவள,(மாரி)துர்க்கை (சூரி) மாகாளி

திரிபுரம் தழல ஏவீ காரவீ அபிராமி
சிவன் இடம் தரி நீலீ நலீ
கவுரி பஞ்சவி ஆயீ மாயீ
சிவை,பெண் அம்பிகை வாலா சீலா அருள்பாலா

அரவ கிங்கிணி வீரா,தீரா
கிரி புரந்து உனிர நாதா பாதா
அழகு கினம் குற மானர் தேனா மணவாளா

அரி அயன பிரமாவோடே மு
வகையா, இந்திர கோமான் நீள வான
அமரா, கந்தருவானோ ஏனோர் பெருமானே

(338) சிந்து பைரவி (5) 338 (ப) ।+।ऽ ।+ऽ।

இரு நோய் மலத்தை சிவ ஒளியால மிரட்டி எனை
இனிதா அழைத்து எனது முடிமீதே
இணைதாள் அளித்து,(2)னது மயில மேல் இருத்தி, ஒளிர
இயல வேல் அளித்து மகிழ இருவோரும்

திரிபுரங்களில் நெருப்பை ஏவினவள், புகலிடமாயுள்ளவள், அழகி
சிவனது இடது பாகத்தில் தரித்து இருப்பவள், நீல நிறத்தவள்.
சூலாயுதத்தை ஏந்தியவள், கௌரி, ஐந்தாவது சக்தியாகிய
அநுக்கிரக சக்தி (அமீ) தாய், மகமாயி நன்மையைச் செய்ய
வள, அம்பிகை மாதா, பாலாம்பிகை (சீலா) பரிசுத்த தேவதை
ஆகிய பார்வதி அருளிய குழந்தையே!

ஒலி செய்கின்ற கிண்கிணியை அணிந்துள்ள வீரனே! தீரனே!
மலைகளைக் காத்து - மலைகளில் வீற்றிருந்தருளி விளங்கும் நாதனே!
(சத்தினி) பாதா. ஞான பக்குவம் அடைந்தவர்க்கு அநுக்கிரக
சக்தியாய்ப் புதிகின்றவனே! அலலது. திருவருட் செல்வத்தை
உடையவனே! அழகும் இளமையும் பொலிவும் குறமான் - வள்ளி
யின் (தேன் ஆர்) இனிமை நிறைந்த மணவாளனே!

திருமால், உருத்திரன், பிரமன் என்ற மும்மூர்த்திகள், இந்திரன் எனும்
அரசன், பெரிய விண்ணுலகத்துத் தேவர்கள், கந்தருவர் எனப்
படுவோர், ஏனையோர்கள் யாவர்க்கும் பெருமானே

338

(இருநோய) பிறப்பு இறப்பு எனனும் பெரிய பவரோகத்தையும்,
மும்மலங்களையும் சிவ தேஜஸ் கொண்டு வெருட்டி ஓட்டி, என்னை
இனிமையாக அழைத்து என்னுடைய சிரசின் மேலே

உனது இரண்டு திருவடிகளையும் சூட்டி, உன்னுடைய மயில் வாகனத்
தின் மீது என்னையும் இருக்கச் செய்து, ஞான ஒளி இயல்பாக வீசும்
வேலாயுதத்தைத் தந்து, நான் மகிழும்படியாக, நாம் இருவோரும்

ஒரு வாகு எனக கயிலை இறையோன் அளித்து அருளும்
 ஒளிர வேத கற்பக நல்   இளையோனே
நளிர மா மறைத தொகுதி சுரர் பாரா துதித்து அருள
 உபதேசிகப்பதமும்   அருளாயே
கரு நோய அறுதது எனது மிடி தூள் படுத்தி விடு
 கரிமா முகக் கடவுள்   அடியார்கள்

கருதா வகைக்கு வரம அருள ஞான தொம்பை மகிழ்
 கருணை கடபப மலர்   அணிவோனே

திருமால அளித்து அருளும் ஒரு ஞான பத்தினியை
 திகழ மார்புறத் தழுவும்   அயில வேலா
சிலை தூள் எழுப்பி கவட அமுனைரை வெட்டி, சுரர்
 சிறை மீள விட்ட புகழ   பெருமாளே

339

(339) வைந்தா   (12)   (-)   14|4.00
இருநத வீடும் கொஞ்சிய சிறுவரும   உறு கேளும்
 இசைநத ஊரும பெண்டிரும இளமையும்   வள மேவும்

விரிநத நாடும் குன்றமும் நிலையென   மகிழாதே

ஒன்று படுவோமாக என்று, கயில மலைக் கடவுள் பெற்று அருளிய,
விளங்கும். வேத. கற்பக விநாயக மூர்த்திககு நல்ல இளையவனே!
விளங்கும் சிறந்த வேதப் பகுதிகளையும், தேவர்களும் பூலோகத்த
வர்களும் போற்றி செய்ய உபதேச மொழிகளையும் அருள புரிவாயாக

கருவிற் சேரும் பிறவி நோயை ஒழிதது, என்னுடைய (மிடி) தரித்திரத்
தையும் தூளாக்கி ஒழித்து விடும் ஆனையின அழகிய முகத்தை
உடைய கடவுள், அடியார்கள்
நினைத்திராத அத்தனை அளவுகக்கு (அலலது) கருதும் முன்னரே - கருத
வேண்டிய அவசியம் இல்லாமலே - வரங்களைத் தருகின்ற ஞான
மூர்த்தியாம் தொப்பைக் கடவுள் ஆகிய கணபதி மகிழும் கருணை
மூர்த்தியே! கடப்ப மலர் அணிபவனே!

திருமால் தந்து அருளிய ஒப்பற்ற ஞான பத்தினியாகிய வள்ளியை
சிறந்த மார்பிலே பொருந்த அணைத்த கூரிய வேலாயுதத்தை உடையவனே!
கிரவுஞ்ச கிரியைத் தூளாக்கி, கபடம் - வஞ்சனையுள்ள அசுரர்களை
வெட்டி அழித்து, தேவர்கள் சிறையினின்று மீளுமாறு அருளிய
புகழை உடைய பெருமானே

339

நான வாசம் செய்யும் வீடும், நான் கொஞ்சிப் பழகும் குழந்தைகளும்,
பொருந்திய சுற்றத்தாரும்
என் மனத்துக்கு உகந்த ஊரும, மனைவி முதலிய பெண்டுகளும்,
எனது இளமையும், செல்வம் நிறைநது
பரந்துள்ள எனது நாடும். (நாட்டில் உள்ள) மலைகளும என்றும் (எனக்கு)
நிலைத்திருக்கும என எண்ணி நான மகிழாமல்

விளங்கு தீபம் கொண்(டு) உனை வழிபட அருள்வாயே
குருந்தில் ஏறும் கொண்டலின் வடிவினை மருகோனே
குரங்கு உலாவும் குன்று உறை குறமகள் மணவாளா

திருந்த, வேதம் தண் தமிழ் தெரி தரு புலவோனே

சிவந்த காவும் தண்டையும் அழகிய பெருமாளே

---

(340) பூபாளம் (5) 340 (–) 1+½+½+1

இணமறை விதங்கள, கொஞசிய சிறு சதங்கை, கிண்
கிணி, இலகு தண்டை அம் புண்டரீகம்
எனது மன பங்கயம், குவளை ரவம் புனைந்து
இரவு பகல சந்ததம் சிந்தியாதோ

உனது அருளை அன்றி இங்கு ஒரு துணையும் இன்றி. நின்
று, உனையும் ஒரு வஞ்சகன பருச பூத
உடலது சுமந்து அலைந்து உலகு தொறும வந்து வந்து
உழலுமது துனபு கணடு அன்புறாதோ
கன நிவத தந்த சங்க்ரம கவள துங்க வெம
கட விகட குஞசரம் தங்கும் யானை

ஒளி தரும தீபங்களை ஏற்றி உன்னை வழிபட (எனக்கு) அருள் புரிவாயே
குருந்த மரத்தில ஏறின மேக வண்ணனும் திருமாலின் மருகனே!
குரங்குகள் உலாவும் குன்றமாகிய (வள்ளி மலையில) வாசம் செய்த
குறப் பெண் வள்ளியின மணவாளனே!
திருத்தமான முறையில, வேதத்தை, இன்பமான தமிழ் மொழியில்
(இருநெறித் தமிழ் எனும் தேவாரமாக) உலகோர் தெரியத் தந்த
(சம்பந்தப் பெருமானும்) புலவனே! [சம்பந்தர் தேவாரம் - ரிக் வேதம்]
செம்மை வாய்ந்த திருவடியும் அதில தண்டையும் அழகு பொலியும் பெருமானே!

340

வேத ஒலித் தொகுதியின் வகைகளைக் (கொஞ்சிய) ஒலித்துக்
காட்டுகின்ற சிறிய சதங்கை, கிண்கிணி விளங்கும் தண்டை
(இவைகளை அணிந்துள்ள) (அம்) அழகிய, தாமரையன்ன உனது திருவடியை
எனது மனமெனும் தாமரையானது, (குவளை) செங்கழுநீர், குராமலர்
இவைகளைப் புனைந்து (இவைகளைக் கொண்டு அலங்கரித்து) இரவும்
பகலும் எப்போதும தியானிக்காதோ!
உனது திருவருள அல்லாது, இங்கு வேறொரு துணையும் இல்லாது நின்று
வேதனைப்படும் ஒரு வஞ்சகனாகிய நான், பஞ்ச பூதங்களால ஆய
உடலைச் சுமந்து அலைந்து உலகு ஒவ்வொன்றிலும் வந்து அழுது, அலைச்சல
உறும் அந்தத் துன்பத்தைக் கண்டு என் மீது அன்பு பிறவாதோ!
(கன) பெருமையுடன (நிவத) உயர்ச்சியை உடையதும், போருக்கு
உற்றதும் (கவள) உணவு உண்டைகளைக் கொள்வதும், (துங்க) பரிசுத்
தமானதும் (வெம) கொடியதும், மதம் கொண்டதும் (விகட) அழகுள்
ளதும் ஆன (ஐராவதம் எனும) யானை மீது வீற்றிருக்கும (யானை) தேவ சேனை

கடக சயிலம் பெரும்படி அவுணா துஞ்ச, முன
கனககிரி சமபு எழுந்து அம்புராசி

அனல் எழ முனிந்த சங்க்ராம மதலே கந்தன என்று
அரனும் உமையும் புகழ்ந்து அனபுகூர
அகில புவனஙகளும் சுரரொடு திரண்டு நின்று
அரி பிரமர் கும்பிடும் தம்பிரானே.

(34) ஆந்தோளிகா (7) 341 (-) 1300

உலகத்தினில் மாதரும் மைந்தரும்
உறு சுற்றமும் வாழ்வொடு (உ)ருங்கிளை
உயா துக்கமுமோடு, உறவு என்று உற வருகாலன்
உதிரத்துடனே சலம எனபொடு
உருதியபடவே வளரும் குடில்,
உதிரக, கண் மீது உற என்றனே அழியாமுன
கலகக் கலை நூல் பல கொண்டு, எதிர்
கதறிப் பதறு உரைவென்று உயர்
கயவர்க்கு உளைய, வினை நெஞ்சொடு தளிகூருங்

கவலைப் புலமோடு உற, என் துயா
கழிவித்து, உன(து) தாளிணை அனபொடு
கருதித் தொழும வாழ்வது தந்திட நினைவாயே

உனது (கடகம்) கங்கணம் அணிந்த (சயிலம்) மலையனைய திருப்புயத்தை
விரும்பபடியும் - அடையும்படியும் - அசுரர்கள் மடியும் படியும். (முன்) முன்பு
பொன் மலையாம் கிரவுஞ்சம் (சம்பு வருந்தி) பாழ்பட்டு அது இருந்த
இடத்தில சம்பு புல் எழவும் - அப்படி நிர்மூலமாகவும் - (அம்பு ராசி) கடல
தீப்பட்டு வற்றவும கோபித்த (சங்கராம மதலை) போருக்கு உற்ற பிள்ளை
கந்தன் என்று சிவனும் உமையும் உன்னை புகழ்ந்து அன்பு கூர
சகல புவனங்களில் உள்ளவர்களும், தேவர்களோடு கூட்டமாய்க் கூடி
நின்று திருமாலும், பிரமனும் கும்பிடுகின்ற தம்பிரானே

341

உலகில் மனைவி முதலிய பெண்களும் புதல்வர்களும், நெருங்கின சுற
றத்தாரும், நல் வாழ்வுடன வாழும பிற சுற்றத்தினரும், மிக்க துக்கத்
துடன, (உறவு என்று உற) பந்துக்கள் என்று வந்து சேருமபடி
வருகின்ற எமன்
ரத்தத்துடன், ஜலம், எலும்பு இவையுடன், நல்ல திடத்துடனே வளர்ந்
துள்ள (குடில்) தேகம். (உதிர) அழிய, நெருப்பில் அந்த உடல் சேருமபடி
என்னை இவ்வாழ்க்கையை விட்டு நீக்குவதற்கு முன்பாக
கலகத்துக்கு இடம் தரும். (சமய) கலை நூல்கள் பலவற்றைக் கற்று (தர்க
கித்து) எதிர் பேசிக் கதறியும பதறியும (உரை வென்று உயர்) பேசுசில்
வல்லவனை வென்று, மேம்பட்டு, (கயவர்) கீழ்மக்களுக்கு உள்ள புத்தி
யைக் கொண்டவனை, தீவினைக்கு உரிய எண்ணத்துடனே. செருக்கு மிகும்
சஞ்சலம உறும அறிவுடனே நான இருக்க, (நீ) என்னுடைய துக்கத்தை
நீக்கி உன்னுடைய திருவடியிணையை அன்புடன நான தியானித்து
வணங்கும் (நல) வாழ்வைத் தந்து உதவ நினைந்தருளுவாயே.

இலகப பதிஷவு உலகங்களும்
அருளைக் கடி, வான் எழும் அமபுவி,
எழில் மிக்கிட வேணியில் வந்து (2)ற — எருது ஏறி

இரு கைத்தலம் மான் மழுவும் புனை
இறை அய்பதியாகிய இனசொலன்
இசையப பரிவோடு இனிது அன்று அருள — இளையோனே

மலை பட்டு இரு கூறு எழ, வன கடல்
நிலைகெட்டு அபிதா என அம் ஜகர்
வலியுற்று அசுரேசரும் மங்கிட — வடிவேலால்

மலை வித்தக வானவர் இந்திரர்
மலர் கைகொடு மா தவரும தொழ
வழிவுற்ற 3ரு தோகையில் வந்து அருள் — பெருமானே

[அபிதா. இது ஆபத்தில முறையிடுக கூறும சொல்]

---

(342) வலஜி (35) 342 (—) 14/4/40 கண்ட நடை

உறவின முறை கதறி அழ ஊராரும ஆசை அற
பறை திமில முழவின இசை ஆகாச மீதும் உற
உலகில உள பலா அரிசி வாய மீதிலே சொரியும்
அநத நாளில்

விளங்கும்படியாகப் பதினாறு உலகங்களிலும் உள்ள இருட்டினை (22)
(கடி) விலக்கி ஒழித்து, வானில் எழுகின்ற சந்திரன், அழகு மிகுந்து
பொலிய (வேணியில்) தனது சடா பாரத்தில் வந்து பொருந்த,
இடப வாகனத்தில் ஏறி

இரண்டு திருக்கரங்களிலும் மானும் மழுவும் விளங்கும்படி அணிந்துள்ள இறைவர் (அப்பதியாகிய) அந்தத் தலைவராகியவர், இனிய சொற்களைக் கொண்டவர் - ஆகிய சிவபெருமானுடைய (இசைய) மனத்துக்குப் பொருந்தும்படி, அன்புடனே இன்பகரமாக (அன்று) முன்பு உபதேசப் பொருளை அருளிய இளையோனே!

கிரவுஞ்சமலை பிளவுபட்டு இரண்டு பிளவாக, வலிய கடல் நிலைகுலைய, (அம் ஜகர் அபிதா என) அழகிய ஜகத்தோர் (அபிதா) அடைக்கலம் என்று முறையிட, தமது வலிமையை இழந்து அசுரத் தலைவர்கள் பொலிவு இழந்து நிலைகுலையக், கூரிய வேலால்

மலை-மலைந்த-போர் செய்த (வித்தக) ஞான சொரூபனே! தேவர்களும், இந்திரர்களும், மலரைக் கைக் கொண்டு மகா தவசிகளும (முனிவர்களும்) தொழுது நிற்க, அழகு பொருந்திய ஒளி ஒப்பற்ற மயில் மீது வந்து அருளும் பெருமானே!

342

உறவு முறை கொண்ட சுற்றத்தினர் கதறி அழ, ஊரில் உள்ளவர்களும் (போய் விட்டார் - இனி என செய்வது என்று) ஆசையற்றுக் கைவிட, பறை திமிலை முழவு ஆகிய வாத்தியங்களின் (இசை) ஒலி ஆகாய முகடு வரை எழ, உலகில் உள்ள பலரும் வாக்கரிசியிடும அந்தக் கடைநாளில்

உன்னுடைய கருணைத் திருமுகக் கமல மலர்கள் ஆறும், பன்னிரண்டு திருக்கரங்களும், திரண்ட புயங்களும், அழகிய (பணி) ஆபரணம்-குண்டலங்களைக் கொண்ட வரிசையான காதுகளும, நீண்ட விழிகளும், (உபய பதம) இரண்டு திருவடிகளின மீது விளங்கும் சிறப்பு மிக்க (நூபுரமும்) சிலம்பும். அழகிய அந்த திருமார்பும்

வேதங்கள் ஒலிக்க, தேவர்கள் கற்பக மலர் மழை பொழிய. (பூமாலைகளினின்றும) தேன் வடியும் வயிற்றில கட்டியுள்ள ஒளி மிக்க மணி வடத்தின் மீது (முன் நூல்) முப்புரிநூல்-பூணூலும் விளங்க, மயில் மீது அழகு விளங்கும் திருவடிவத்துடன், திருமுன்னே நிறைந்த அடியார்கள் உடன் வந்து கூட யமனுடைய படைகள (தூதராதியோர) யம புரத்தை நோக்கி ஓட்டம் பிடிக்கும்படி. அவர்களுடன போர் புரிந்து. வெற்றிச் சின்னங்கள் பலவும் வரிசை-வரிசையாக ஊதி வாது செய்து (தர்க்கித்து). (மதலை) சிறுவனும (அருகே) ஒரு மழலைச் சொல போலப் பேசுகின்ற அடி நாயேன் ஆகிய என்னை ஆட்கொள்ளும் பொருட்டு இவ்வாறு வந்து உதவ மாட்டாயோ'

பிறைச் சந்திரன போன்ற (எயிறு) பற்களும், (முரண்) வலிமையும் கொண்ட அசுரர்கள (பேராது) வேறு இடங்களுக்கு ஓடிப் போக முடியாமல், பூமியில் மாண்டு விழ, ஏழுலகத்தினரும (அதிர) நடுங்க, (ஈரேழு) பதினான்கு உலகத்தினரும ஓலமிட - அபயக் கூச்சலிட - (பிடி) பெண்யானை, (களிறு) ஆண்யானை இவைகளின (அடல நிரைகள்) வலிமை மிக்க வரிசைகள், பாழ்பட்டழிய அஷ்ட திசைகளில உள்ள நாகங்கள்

இடம் விட்டு ஓட, நீண்ட மலைகள் இடிபட்டுத் தூளாக, பெரிய கடல்கள் வற்றிப் புழுதி கிளம்ப. பெரியதான ஒரு வயிற்றை உடைய மாகாளியானவள் பேய்களுடன் பிணத்தின் கொழுப்பையும், மாமிசத்தையும் உண்டு, அந்தப் பேய்களுடன் கூத்தாடும் வண்ணம் (போரில்) வென்ற தீரனே!

உனது முக கருணை மலர் ஓர் ஆறும், அறு இரு கை
திரள் புயமும், எழில மணி கொள் வார் காது நீள் விழியும்
உபய பத மிசை குலவு சீர் ஒரு நூபுரமும் அந்த மார்பும்

மறை அறைய, அமரர் தரு பூமாரியே சொரிய,
மது உருகு உதர வில் மணி மீதே மூநூல ஒளிர,
மயிலின மிசை, அழகு பொலி ஆனாய முன ஆர அடியர் வந்து கூட

மறலி படை யம புரமும மீது ஓடவே பொருது
விருது பல முறை முறையிலே ஊதி வாது செய்து
மதலை ஒருகுதலை அடி நாயேனை ஆள இங்ஙன் வருதிடாயோ

பிறை எயிறு முரண அசுரர் பேரது பாரில் விழ
அதிர எழு புவி, உலகம ஏரேழும் ஓலம் இட
பிடி களிறின அடல நிரைகள பாழாகவே, திசையில நிறை நாகம்

பிரிய, நெடு மலை இடிய, மா வாரி தூளி எழ
பெரியது ஒரு வயிறு உடைய மா காளி கூளியொடு
பிண நிணமும உணவு செய்து பேயோடும ஆடல செய வென்றதீரா

குற மறவா கொடி அடிகள கூசாது போய் வருட
கரடி புலி திரி, கடிய வாரான கானில், மிகு,
குளிர் கணியின் இள மரமதே ஆகி, நீடி உயா குன்று உலாவி

கொடியது ஒரு முயலகனின் மீது ஆடுவாருடைய
ஒரு புறம் அது உற வளரும் மாதா பெரு அருள் செய
குமர குருபர, அமரர் வானவர் பேண அருள் தம்பிரானே

(343) சிந்து பைரவி (8) 343 ஆதி

ஊனும் தசை உடல் தான் ஒன்பது வழி
ஊறுங் கரு வழி ஒரு கோடி
ஓதும் பல கலை, கீதம், சகலமும்
ஆரும்படி உனது அருள் பாடி
நான் உன திருவடி பேணும்படி, இரு
போதும் கருணையில் மறவாது உன
நாமம் புகழ்பவர் பாதம் தொழ இனி
நாமும்படி அருள் புரிவாயே
காணும், திகழ் கதிரோனும், சசியொடு,
காலங்களும், நடை யுடையோனும்

குறக்குல மலை வேடர்களின் (கொடி) பெண்ணான வள்ளியின் திருவடிகளை நாணம் கொள்ளாமல் சென்று பற்றி அருள்புரியும் பொருட்டு, கரடிகளும், புலிகளும் திரியும், கருமையான நீண்ட காட்டில் (மிகு) மிகுந்த எழுந்த - விளங்கி எழுந்த, குளிர்ந்த (கனியின்) வேங்கையின் இள மரம் ஆக உரு எடுத்து நின்று, நீண்டு உயர்ந்திருந்த குன்று வள்ளிமலையில் (உலாவி) உலா வினவனே!

கொடியதான ஒப்பற்ற முயலகன் என்னும் பூதத்தின் மீது நின்று நடனம் புரிகின்றவரான சிவபெருமானது ஒரு பாகத்தில் - இடது பாகத்தில் பொருந்தி விளங்கும் தாய் - பார்வதி பெற்றருளிய குமர குருபர மூர்த்தியே! அமரர் யாவரும் (வேண்) விரும்பிப் போற்ற அவர்களுக்கு அருளின தம்பிரானே!

343

மாமிசமும் சதையும் கூடிய (இந்த) உடலதான ஒன்பது துவாரங்களுடன் கூடிச் சேர்ந்து வரும், கருவின் வழி, ஒரு கோடிக் கணக்கானது, (ஆதலினால் என் பிறப்பு ஒழியுமாறு நான்)

படிக்கின்ற பல சாத்திர நூல்களையும், இசை ஞானத்தையும் - ஆக எல்லாவற்றையும் உணரும்படியும் உனது திருவருளைத் துதித்துப் பாடி நான் உன் திருவடிகளை விரும்பிப் போற்றும்படியும், காலை மாலை இருபோதும் உனது கருணையை மறவாமல் நினைந்து, உனது திருநாமங்களைப் புகழ்பவர்களுடைய திருவடியைத் தொழ இனியேனும் விரும்பும் வண்ணம் (நீ) திருவருள் புரிவாயாக

காடும் விளங்கும் சூரியனும், சந்திரனும் அவர்களுடன் இறப்பு நிகழ்வு எதிர்வு எனும் முக்காலங்களும், (நடையுடையோன்) காற்றும்

காருமு, கடல், வரை. நீரும் தரு. கயி
லாயன கழல தொழும — இமையோரும்
வான் இந்திரன நெடுமாலும் பிரமனும்
வாழும்படி விடும் — வடிவேலா
மாயம் பல புரி சூரன் பொடிபட
வாள் கொண்டு அமர் செய்த — பெருமானே.

---

344 சங்கராபரணம் (8) 344 (ஏ) ஆதி

ஊன் ஏறு எலும்பு, சீசீ மலங்க
ளோடே நரம்பு — கசுமாலம்
ஊழ் நோய் அடைந்து மாசான மண்டும்
ஊனுடு உழன்ற — கடைநாயேன்

நான் ஆர் ஒடுங்க, நான் ஆர் வணங்க,
நான் ஆர் மகிழ்ந்து — உனை ஓத

நான ஆர் இரங்க நான் ஆர் உணங்க.
நான் ஆர் நடந்து — விழ நான் ஆர்

தானே புணர்ந்து தானே அறிந்து
தானே மகிழ்ந்து — அருள ஊறித்
தாய் போல் பரிந்த தேனை உகந்து
தானே தழைந்து — சிவமாகித்

மேகமும், கடலும் மலையும், நீரும் இவைகளையெல்லாம் படைத்தருளிய
(கைலாயன்) சிவபெருமானுடைய திருவடியைத் தொழுதுநின்ற தேவர்களும்
விண்ணிலுள்ள தேவேந்திரனும், நெடிய திருமாலும், பிரமனும் வாழும்படி
யாகச் செலுத்தின கூரிய வேலாயுதனே
மாயைகள் பலவற்றைப் புரிந்த சூரன் தூளபட்டழியும்படி வான் கொண்டு
போர் புரிந்த பெருமானே

344

மாமிசம் மேலே ஏறியுள்ள மூடியுள்ள எலும்பு சீ சீ என வெறுக்கத்தக்க
அழுக்குகள் - இவையுடனே நரம்புகள், (பிற) அசுத்தங்கள்
ஊழ் வினை சம்பந்தமாக நோய்கள் - இவைகளையெல்லாம் அடைந்து,
குற்றங்களை நெருங்கிச் சேருகின்ற இந்த (ஊனோடு) உடலோடு அச்சமுள
உற இழிவுபட்ட நாயனைய அடியேன - இப்படிப்பட்ட நான
(ஒடுங்க நானார்) அடங்கி ஒடுங்குதல் என் வசத்தில உள்ள சக்தியா!
வணங்கிப் பணிதல் என் இச்சையில் உள்ள செயலா! மகிழ்ச்சியுடன்
உன்னைப் போற்றுதல் என் இச்சையில் உள்ளதா!
உயிர்களிடத்தே இரக்கம் கொள்ளுதல் என் இச்சையில் உள்ளதொன்றோ.
(உணங்கு) சிந்தை வாடி மெலிதல் தான் என் இச்சையா! நடத்தல்
தான் என இச்சையா! விழுதல் தான் என் இச்சையா!
புணரும் பொருளெலாம் தானேயாய, அறிபவனும் தானேயாய
மகிழ்பவனும் தானேயாய், அருள் சுரந்து
தாய் போன்ற அன்னைக் காட்டும் தேன் அனைய தேவியுடன் மகிழ்ந்து
செழியுடன் விளங்கிச சிவமாயத் திகழ்பவனும் தானேயாய

தானே வளர்ந்து தானே இருந்து
தார் வேணி எந்தை அருள்பாலா

சாலோக தொண்டா சாமீப தொண்டா
சாருப தொண்டர் பெருமானே 2

(345) த்விஜாவந்தி (16) 345 (ட) ஆதி - 2களை

எட்டுடன் 3ரு தொளா வாயாயது பசு
மட கவும், இரு வினை தோயா, மிகு பிணி,
இடமுடை செய 3ரு போதாகியும உயிர் நிலையாக

எப்படி உயர்கதி நாம ஏறுவது என
எட்ட பகிரினும இது 3ராா், தம தமது
இச்சையின் இடர் உறு பேராசை கொள கடல் அதிலே வீழ

மூட்டாகள நெறியினில் வீழாது அட லொடு
முப்பதின அறுபதின மேலாம அறுவரும,
முறையுதல அறிவு அரு ஞானதைய 3னி வெளியாக

வளாயவனும், அழியாது இருப்பவனும் தானேயாய் - இங்ஙனம்
தன்னந்தனி நின்று விளங்கும் பெருமான் - பூமாலை அணிந்த
சடையினராம் எம்பெருமான் - சிவன் அருளிய குழந்தையே!
சாலோகம், சாமீபம், சரூபம் என்னும் மூவகையில் உள்ள
அடியார்களுக்கும் பெருமானே! [சாயுஜ்ய பதவியில இறைவனை
இரண்டறக் கலத்தலால் ஏனைய மூவகைத் தொண்டர்களை கூறினா]

345

எட்டு+ ஒன்று = 9 ஒன்பது தொளை வாயில்களை உடையது (பசு மட கலம்)
பச்சை மண்ணாலாய பாத்திரம், ஆய இந்த உடல், நல்வினை-தீவினை
எனனும் இரு வினைகளிலும் (தோயா) தோய்ந்து, மிக்கு வரும் பிணிகள
(நுகோதாகிலும) ஒரு பொழுதிலேனும் (உயிர் நிலையாது) இந்த உடலில
உயிர் நிலைத்திருப்பதற்கு (இடநடை செய) தடைகள செய்ய (எபபோ
தும் நிலைத்திராதபடி செய்ய)
எப்படி மேலான நற்கதியை நாம் கரையேறி அடைவது என
(என பகிரினும்) என் பிளவு பட்ட அளவு கூட (இது ஓரார்) இதன்
உண்மையை அறியாதவர்களாய்த் தங்கள் தங்களுடைய ஆசை
போன வழியே (இடர் உறு) துன்பத்தைத் தருகின்ற பேராசை
என்கின்ற கடலிலே வீழ்கின்ற
மூடர்களின வழியில் நான் விழாமல், வலிமை கொண்டதாய (30+60+6)
96 தததுவங்களை (முறறுதல அறிவு அரு) முற்றிக கடந்த அறிவுக்கும
அருமையான (எட்டாததான) ஞானம உதயமாகுமபடியான
(ஒளி) விளககமானது வெளிபபட்டு விளஙகச

முக்குணம் அது கெட, நானு என வரு,
முத்திரை அழிதர, அரா அமுது அ(ன)ன
முத்தமிழ தெரி கனி வாயால் அருளுவது   உரு நானே

திட்டென எதிர் வரு மா காளியின் ஒரு
திக்கிட தரிகிட தீதோம் என உரு
சித்திர பெரு வித வாதாடிய பத   மலரானன்

செப்புக என, முனம் ஓதாது உணாவது
சிற்குக பர வெளி ஈதே என அவர
செவிண செவி தனிலே போதனை அருள்   குருநாதா

மட்டற அமர் பொரு சூராதியன் உடல்
பொட்டு எழ, முடுகி, வை வேலால் எறி தரு
மற்புய, மரகத மா தோகையில் நடம்   இடுவோனே

வச்சிர கர தவ வானோ அதிபதி
பொற்புறு கரி பரி தேரோடு அழகுற
வைத்திடு மருமகனே வாழ அமராகள்   பெருமானே!

சத்துவம், இராசதம், தாமதம் என்ற மூவகைக் குணங்களும் அழிய
நானு நானு என்று முளைக்கின்ற - நான் நான் என எழுகின்ற ஆணவ
உணர்ச்சியாம் அந்த அடையாள முத்திரையானது அழிந்து ஒழிய,
தெவிட்டாத அமிர்தம் போன்ற முத்தமிழைத் (தெரி) தெரிந்து போதிக்க
வல்ல உன்னுடைய இனிய வாக்கினால் உபதேசித்தருளும்
ஒரு நாள் எனக்குக் கிடைக்குமா!

திகிரென்று (வாதித்து) எதிர்த்து நின்ற மகா காளியுடன், திக்கிட தரிகிட
தீதோம் என்று (ஒரு) ஒப்பற்ற விசித்திரமான பல வகையதான (வாது
ஆடிய) தருக்கித்து ஆடினதான கூத்துக்களை நடித்த திருவடி மலர்களைக்
கொண்ட பெருமான்
(உபதேச மொழியைச்) சொல்வாயாக என்று கேட்க. (முனம்) முன்பு,
ஓதாமலே உணர வேண்டியதும். (சிற்சுக) ஞானானந்தமானதும். (பரவெளி)
ஞானாகாசமானதுமான பொருள் இது தான் என்று அவருடைய
(தெக்ஷிண செவி தனிலே) வலது காதிலே, (போதனை அருள்) உபதேசப்
பொருளை அறிவித்தருளிய குரு நாதனே!

குறைவற்ற வழியில - மிகப்பல வழியில் - சண்டை செய்த சூரனும் தலைவனு
டைய உடலானது பொடி பட்டு அழிய, (முடுகி) அவனை வேகமாய் எதிர்த்து
(வை) கூரிய வேல் கொண்டு எறிந்த வளப்பம் பொருந்திய புயங்களை
உடையவனே! பச்சை நிறங் கொண்ட அழகிய மயில் மீது நடனம் செய்பவனே!
வச்சிராயுதத்தைக் கையிற் கொண்ட தேவர் தலைவனும் இந்திரன் - அவனு
டைய அழகு கொண்ட ஐராவதம் என்னும் வெள்ளை யானை, உச்சைச்சி
ரவம் எனும் குதிரை, தேர் முதலியவற்றுடன அழகுற விளங்கும்படி
அவனை வாழ வைத்த மருமகனே! வாழ்ந்து விளங்கும் தேவர்களின் பெருமாளே

(346) ஹம்ஸா நந்தி (18½) ம் (1+1½+1+1½+1+1½+1+1½+1+1½+1+1½+1½+2)

எதிர ருவர் இலை உலகில் என அலகு சிறுகு விருது
இட்டு கரியைக்தே எழுந்து, பாரின்
இடை உழலவ் சுழலுவன சமய வித சகல, கலை
எட்டெட்டும் எடடாத மந்த்ர வாளால்

விதி வழியின் உயிர் கவர வரு கொடிய யம படரை
வெட்டுத துணித்து ஆண்மை கொண்டு, நீபம்

விளவின் இள இலை, தளவு. ஒவண்ணி குமிழ் பவன நிற
வெடசித் திருத்தாள வணங்குவேனே
திதி புதல்வரோடு பொருது, குருதி நதி முழுகி, தளிர்
செக்கச் செவத்து ஏறு செங்கை வேலா

சிகர கிரி தகர விடும உக்ர, மரகத கலப
சித்ரக் ககத்து ஏறும் எம்பிரானே

முதிய பதினெண் விடையா முடுகுவன பரி ககன
முட்டச் செலுத்து அறி ரண்டு தேரா

மொழியும் இரு அசுவினிகள், இரு சது வித வசு எனும்
முப்பத்து முத்தேவர் தம்பிரானே

(28)

எமக்கு எதிரானவர்- சமானமானவர் ஒருவரும் இல்லை உலகத்திலேயே என்று (அலகு) கூர்மையான (சிலுகு) (வாதப்)போருக்கு, (விருது) கொடி கட்டி, அத்தகைய செய்கைக்கே துணிந்தெழுந்து - இப்பூமியில்

இடையிலே திரிந்து சுழல்பவர்களான எல்லா வகைய சமய வாதிகளையும், (கலை எட்டெட்டும்) அறுபத்து நான்கு கலைகளாலும் எட்ட முடியாத - அறிய முடியாத - மந்தர (ஞான) வாள் கொண்டு

பிரமன் எழுதின விதிப்படியே, உயிரைக் கவர வரும் கொடிய யம தூதர்களை வெட்டித் துண்டப் படுத்தி. எனது (அணைமை) பக்தி வைராக்யத்தை நிலை நிறுத்திக் கடப்ப மலர்

விளாவின இளந் தளிர், (தளவு) முல்லை, கழுநீர் மணக்கும் பவள நிறமுள்ள (சிவந்த) வெட்சி மாலை அணிந்துள்ள திருத்தாளை வணங்கு (மாட்டு (கு))

திதியின் புதல்வர்களாகிய தயித்தியர் - அசுரர்களுடன் போர் புரிந்து - உதிர ஆற்றில் முழுகி, விளக்கமுறும் செக்கச் செவேல என்னும் மிகக் செந்நிறத்துடன் உனது செவ்விய திருக்கரத்தில் பொருந்தி உள்ள வேலை உடையவனே!

சிகரங்களை உடைய கிரவுஞ்சகிரியைப் பொடி செய்த திருவுருவத்துடன் பச்சை நிறத் தோகையையும் அழகையும் உடைய (ககம்) பட்சி யாம மயில் மீது ஏறும் எம்பெருமானே!

பழமையான பதினொரு (11) விடையர்-ருத்திரர்களும், விரைவாகப் செலுத்தப்படும் குதிரைகளை (ககனம்) ஆகாயத்தில் நடத்து செலுத்து கின்ற (ஆறிரண்டு) 12 தேர்களை உடைய பன்னிரு சூரியர்களும்

மருத்துவ நூல்களைச் சொன்ன (2) இரண்டு அசுவினி தேவர்களும்

2×4 8 என விதவசுக்களும் ஆக (11+12+2+8) முப்பத்து மூவகை (—) தேவர்கள் தம்பிரானே

(347) ஆனந்த பைரவி (25) (ம) 1+4+0- கண்ட நடை

எழுத அரிய அறுமுகமும, அணி நுதலும், வயிரம்
இடை இட்டுச சமைந்த, செம் சுட்டிக கலன்களும்
துங்க நீள், பன்
னிரு கருணை விழி மலரும, இலகு பதினிரு குழையும்
ரத்நக் குதம்பையும், பத்மக கரங்களும்
செம் பொன் நூலும்
மொழி புகலும் உடை மணியும் அரை வடமும, அடி இணையும்
முத்தச் சதங்கையும், சித்ரச் சிகண்டியும்
செம கை வேலும்
முழுதும அழகிய குமர, கிரிகுமரியுடன உருகு
முக்கட சிவன பெரும சற்புத்ர உமைதம்
தமபிரானே
தொலைவு இல பிறவியும் அகல ஒரு மவுன பரம சுக
சுத்தப் பெரும் பதம் சித்திக்க அன்புடன
சிந்தியாதோ

348

(348) கரஹரப்ரியா (5½) (ம) 1+1½+1½+1½

எழு பிறவி நீர நிலத்தில் இரு வினைகள போய பிடித்து
இடா முனைகளே முனைதது வளா, மாயை
எனும உலவையே பணைதது, விரகுழையே குழைதது,
இருள இலைகளே தழைத்து மிக நீளும

347

எழுத முடியாத அறு திருமுகங்களும், அழகிய நெற்றியும், வயிரங்கள் மத்தியில் வைக்கப் பெற்று (சமைந்த) அமைந்துள்ள, செவ்விய சுடடி முதலிய (கவண) ஆபரணங்களும், (துஙக) பரிசுதத மான, நீண்ட (மனனிரு)
பனனிரண்டு கருணை விழி மலர்களும், (இலகு) ஒளி வீசுகின்ற, (10+2) பன்னிரண்டு குணடலங்களும, ரதநததாலாய (குதம்பையும்) காதணியும்
தாமரையனன திருக்கரங்களும், செம்பொனனலாய பூணூலும்
சொலலிப் புகழ ததக்க, உடை மணியும், அரையிற் கடடியுளள அரைநாணும இரணடு திருவடிகளும். முதது களால் அயசதங்கைகளும். அழகிய மயிலும், செவ்விய திருககரததில வேலாயுதமும் - இவ்வாறு
முழுதும் அழகு மயமாயுள்ள குமர மூர்த்தியே! இமயமலையின் மகள பார்வதியுடன உளளம் உருகி மகிழகின்ற, முககண கொண்ட சிவபெருமான்
பெற்ற, நற்குணம - நற்செயகை உளள புத்திரனே! தேவர்கள தம்பிரானே! முடிவே இலலாத பிறபபும் அழிய, ஒபபுற மவுன பரம சுகமதாம் பரிசுத்தப் பெரிய (பதம) நிலை [அலலது திருவடி] சிததிகக - எனககு கிடைக்குமாறு அன்புடனே, உனது திருவுளளம் நினைககாதோ!

348

எழு பிறப்புகள் எனப்படும் நீர் கொணட நிலத்திலே (ஈரமுள்ள மணணில) நல வினைகள தீவினைகள எனபபடும இரு வினைகள என்கின்ற வேர்கள் ஊன்றக்
கொணடு, துனபம் என்கின்ற முளைகள் முளைகக, வளர்ந்து, மாயை - பொயத தோற்ற எனப்படும (உலகையே) கொம்புகள (பிணைத்து) செழியபுறப் பெருத்து (உணர்ச்சிகள்)
(விரகம்) காமம என்கின்ற தளிர்கள தளிர் விடடு, (இருள) அஞ்ஞானம என்கின்ற இலைகள செழிபபுடன தழைதது மிகவும் பெரிதாகி

இறவு நனையே பிடிதது மரண பழமே பழுத்து
இடியும் உடல் மாமரத்தினை அருநிழல்

இசையில விழ, ஒத புத்தி, அழியுமுனமே எனக்கு
இனிய தொரு போதகத்தை அருள்வாயே

வழுவு நெறி பேசு தக்கன் இசையு மக சாலை உற்ற
மதி இரவி தேவர் வஜ்ர படையாளி

மலர்க கமல யோனி, சக்ர வளை மருவு பாணி, விக்ர
மறைய எதிர, வீரபுகரர் புதல்வோனே

அழகிய கலாப கற்றை விகட மயில் ஏறி, எட்டு
அசலமிசை வாகை இட்டு வரும் வேலா
அடல் அசுரர் சேனை கெட்டு முறிய மிக மோதி வெட்டி
அமரர் சிறை மீள விட்ட பெருமானே

(இழவு) கேடு என்னும் (நனை) பூ மொட்டுக்கள் அரும்பு விட, மரணம் என்கின்ற பழம் பழுத்து (முடிவில்) கிழியும், முறிந்து அழிந்து போகின்ற உடல் எனப்படும் மாமரத்தின் அரிய நிழலாகிய

(ஆதபத்தி- ஆதபத்திரம) குடையானது (உடல் எனப்படும் நிழல் தரும் மாமரக்குடை) இசையில விழ- அதன் பண்பு இறந்துபட- அழியு முன்னரே எனக்கு(நீ) இனிமை தரும் ஒப்பற்ற உபதேச மொழியை அருள் புரிவாயாக (அல்லது) உடலாகிய மாமரத்தின் அருமையான நிழல் புகழ் இன்றி மறைய (ஆதபத்திய) தீப்பட்டு அழியு முன்னர்

தவறான (வேதாகமங்களினின்றும் விலகிய) வழியைப் பேசின தக்கன் அமைத்த யாக சாலைக்குச் சென்றிருந்த சந்திரன், சூரியன், தேவர்களை, வஜ்ராயுதத்தை யுடைய இந்திரன்

தாமரை மலரில் பிறந்த பிரமன், சக்கரம் சங்கு இவைகளை ஏந்தின திருக்கைகளை உடைய திருமால - இவர்களின் (விக்ரமம) பராக்ரமம மறைந்தொடுங்க அவர்களை எதிர்த்து அடக்கின வீர உக்ர மூர்த்தியாம [வீரபத்திரராக வந்த] சிவ பெருமானது புதல்வனே

அழகான தோகைக் கற்றையைக் கொண்ட (விகட) அழகிய மயிலில் ஏறி எட்டு குலமலைகளையும் வெற்றி கொண்டு (வலம்) வந்த வேலனே!

வலிமை வாய்ந்த அசுரர்களின் சேனை அழிபட்டு முறியும்படி, மிகவும் பலமாகத் தாக்கி அவர்களை வெட்டி அழித்து, தேவர்களை சிறை யினின்றும் மீண்டு வரும்படி செய்த பெருமானே-

349 பூரவிகல்யாணி (10) (ஃ) ⌐ᴗ0

என் பந்த வினைத் தொடர் போகவி விசையமாகி
இனயம் தனை உறு மகா புரியம் அதுவாகி
அனபுந்திய பொறகிணி யாற்கடல அமுதான
அந்தம் தனில இசசை கொள ஆறுபதம் அருள்வாயே

முன, புநதி நினைத்து, உருவாற சிறு வடிவாகி
முன திந்தி எனப பரதாத்துடன நடமாடித்

தம் பந்தம் அறத தவ நோற்பவர் குறை தீரச
சம்பந்தன் எனத் தமிழ தேக்கிய பெருமானே

350

350 காவடிசசிந்து (3½) (ஃ) ½+2

ஏட்டிலே வரை பாட்டிலே, சில
தீட்டிலே இனிது என்று தேடி
ஈட்டமே மா பொருள், பாத்து உணது, இகல்
ஏற்றமான குலங்கள பேசிக்
காட்டிலே இயல் நாட்டிலே பயில்
வீட்டிலே உல கங்கள ஏசக

எனது, சூழ்ந்து கட்டியுள்ள வினை எனப்பட்ட (தொடரை)
விலங்கை அழித்து (நான்) வெற்றியடைந்து
இன்ப நிலையை அடைந்து நிரம்ப பிரியம் கொண்டு
அன்பு பெருகிய நிலையதாய், பொற் திண்ணியில உள்ள பாற்கடல்
அமுதத்துக்கு உவமான
முடிவான பேரின்பப் பொருள் மீது, ஆசையைக் கொள்கின்ற
(ஆனந்தம்) ஆதார நிலையைத் தந்தருள்வாயே!
முனபு (சூரனை அழிக்க) மனத்தில நினைத்து உருவத்தில இளையவனாய்
முன (சூர சம்ஹாரம் ஆன காலத்தில்) திந்தி என்னும் ஒலியுடன
பரதசாத்திர முறைப்படி துடி எனனும் கூத்தினை ஆடி
தங்களது (பந்தம்) மலக்கட்டு (அற) நீங்க தவநிலையில் நின்று நோற்ப
வாகருடைய குறைகள் நீங்க
சம்பந்தமூர்த்தி எனும் பெயருடன விளங்கித் தமிழை நிரம்பப் பருகின
(பருகி உலகுக்குத் தந்த) பெருமானே

ஏட்டிலே (வரை) எழுதப்படுகின்ற (நரஸ்துதிப்) பாடல்களும், சில பாடல்கள்
நீட்டி இசை பாடுதலும், (பொருள் சம்பாதிப்பதற்கு) இனிய வழிகளாம்
என்று எண்ணி, (பிரபுக்களைத்) தேடிச் சென்று
சம்பாதிக்கின்ற பெரும் பொருளைப் (பாத்து) பகுத்து - பங்கிட்டு உண்டும்
மல. (கிலே-) தகுதி மிக்க குலப் பெருமைகளைப் பேசி
காட்டிலும், பொருந்திய நாட்டிலும், இருந்து பழகும் வீட்டிலும் (உலகமக்
ஏச) உலகின உள்ளோரின் பழிச் சொல்லுக்கு ஆளாகி - (ஈறில)

காக்கை நாய நரி பேயக்குழாம் உண
யாக்கை மாய்வதா ஒழிந்திடாதோ
கோடடும் ஆயிரம் நாடடனை நாடு உறை
கோட்டு வால் இப மங்கை கோவே
*

கோதத வேலையில ஆர்த்த தா பொரு
வேற் சிகாவளா கொங்கில வேளே

பூடடு வார சிலு கோடடு வேடுவர்
பூடகை சேர்,குற மங்கை பாகா

பூத்த மா மலர் சாத்தியே கழல
போற்று தேவர்கள் தம்பிரானே.

351

(351) மணிரங்கு (8) (-) ஆதி

ஒழுகு ஊன இரத்தமொடு தோல உடுத்தி
உயர் கால கரதத்தின உருவாகி
ஒரு தாய் வயிற்றின் இடையே உதித்து
உழல மாய மிகவு வரு காயம்
பழசா இரைப்பொடு இளையா விருதத
பரிதாப முற்று மடியா முன்

காகங்களும், நாயும், நரியும், பேய்க் கூட்டங்களும் உண்ணும்படி இந்த உடல் இறந்து படுதல் என்பது ஒழியாதோ - நீங்காதோ!

(கோட்டும்) அமைப்புப் பெற்ற, ஆயிரம் (நாட்டன்) கண்களையுடைய இந்திரனுடைய பொன்னுலகில் உறைகின்ற (கோட்டு) தந்தங்களை உடையதும் (வால்) வெண்ணிறமுடையதுமான (இபம்) யானை ஐராவதம் வளர்த்த மங்கை - தேவசேனையின் - தலைவனே

கவிந்துள்ள கடலில், ஆர்ப்பரித்து நின்ற சூரனோடு சண்டையிட்ட வேலாயுதத்தை ஏந்திய (சிதாவள) மயிலவனே! கொங்கு நாட்டு தலங்களில் வீற்றிருக்கும் செவ்வேளே!

கட்டப்பட்ட (நாண் ஏற்றப்பட்ட) பெரிய (சிலை) வில்லை ஏந்திய (கோட்டு வேடுவர்) மலை வேடர்களின் (பூட்டை சோர) கொள்கையில் - பழக்க வழக்கங்களில் - சேர்ந்து வளர்ந்த, குறமங்கை வள்ளியின் மங்களனே! மலர்ந்துள்ள நல்ல பூக்களைச் சாத்தி (உன) திருவடியைப் போற்றும் தேவர்கள் தம்பிரானே!

351

பரந்துள்ள மாமிசம், ரத்தம் இவைகளுடன் தோல் கொண்டு மேய்ப்பட்டு உயரமாயுள்ள கால்கள், கைகள் இவைகளுடன் ஒரு உருவமாகி ஒரு தாயினுடைய வயிற்றில் தோற்றம் கொண்டு பிறந்து, அலைச்சலுற்ற தருமமாய உணர்ச்சி மிகுந்து வருகின்ற (காயம்) இந்த உடல் பழமை அடைந்து - நீப்பு உற்று, மூச்சு வாங்குதலால் (இளைப்ப) இளைப்பு - சோர்வு அடைந்து, கிழவன் எனனும் பரிதாப நிலையை அடைந்து, இறந்து போவதற்கு முன்பாக

பரிவால உளததில உருகா எனைச் சொல்
பகர் வாழ்வு எனககு — அருள்வாயே

ஏழ வானகத்தில இரு நாலு திக்கில்
இமையோர தமக்கும — அரசாகி
எதிர் ஏறு மத்த மத வாரணத்தில்
இனிது ஏறு கொற்ற — முடன் வாழும்

செகுமா மணிப் பொன நகர் பாழ் படுத்து
செழு தீ விளைத்து — மதின கோலித்
திடமோடு அரக்கர் கொடு போய் அடைத்த
சிறை மீள விட்ட — பெருமானே

(352) ஸாவேரி (8) 352 (–) (1½+2+2+1½+1)

ஓது முத்தமிழ் தேரா வ்ருதாவனே
வேதநூல பகு காரமா விகாரனே
ஊனம உறறு உழல் ஆபாச ஈனனே — அந்தர்யாமி
யோக மற்றுழல ஆசாபாசனே
மோக முற்றிய மோடாதி மோடனே
ஊதியத தவம நாடாத கேடனே — அன்றில் ஆதி
பாதகக கொலையே தொழு கபாடனே
நீதி சற்றும இலா கீத நாடனே
பாவியாககுளெலா மா துரோகனே — மணணின மீதில

அன்பு கலந்த உள்ளத்துடனே 'முருகா' என்ற உனது திருநாமத்தைக்
குறிக்கும் சொல்லை (முருகா) நான் சொல்லும்படியான வாழ்வை
என்னையும் பொருட்படுத்தி எனக்கு அருள்வாயாக

விளங்குகின்ற விண்ணுலகிலும், எட்டுத் திசையில் உள்ள தேவர்களுக்கெல்லாம் அரசாகி

(அத்தேவர்களுக்கு) எதிரே - அவர்கள் முன்னிலையில் (ஏறும்) விளங்கும், செருக்குள்ளதும் மதம் பொழிவதுமான (வாரணம்) வெள்ளை யானையாம் ஐராவதத்தில் இன்பகரமாக ஏறி வரும் வெற்றி நிலையுடன் வாழ்ந்த

செழுமை வாய்ந்த அழகிய பொன்னுலகைப் பாழ்படுத்தி, பெருந் தீயிட்டு அழித்து, அவ்வூரை மதில போல வளைத்து

வலிமையுடன் அரக்கர்கள் கொண்டு போய்ச் சிறையிட்ட தேவர்களின் சிறையை நீக்கி அவர்களை வெளி விட்ட பெருமானே.

352

ஓதப்படும் முத்தமிழைத் தேர்ந்தறியாத வீணனை, வேதனையே தருகின்ற காம விகாரனை, குற்றம் - பழி கொண்டு திரியும் அசுத்தமான கிழிவுள்ளவனை, எங்கும் வியாபித்திருக்கும் தன்மை வாய்ந்த

யோக நிலையைக் கூடாமல் திரிகின்ற ஆசைப் பேயனை, காம மயக்கம் நிரம்பிய மூடர்களுள் தலையாய மூடனை பயன் தரக்கூடிய தவத்தைத் தேடாது கேடு கொண்டவனை, அன்றிற் பறவையாதிய உயிர்களை

பாதகத்துக்கு இடமாகிக் கொலை செய்யவே கருதுகின்ற (கூடனை) வஞ்சகனை, அழகக நெறியில்லாத இசைப் பாடல்களை விரும்புகின்றவனை, பாவியர்களுக்கெல்லாம் மகா பாதகனைப், பூமியின் மீது

பாடு படு அல மா கோப வோபனை
வீடு படடு அழி கோமாள வீணனை
பாச சிககினில வாழ்வேனை ஆளுவது — எந்த நாளோ

ஆதி சற்குண சீலா நமோ நம
ஆடகத் திரி சூலா நமோ நம
ஆதரிதது அருள பாலா நமோநம — உந்தி ஆமை

ஞானவர்க்கு இனியானே நமோநம
ஞான முத்தமிழ் தேனே நமோ நம
ஆரணர்க்கு அரியானே நமோ நம — மன்றுள ஆடும்
தோதி தித்திமி தீதா நமோ நம
வேத சித்திர ரூபா நமோநம
சோயம் அற்றவர் சாமி நமோ நம — தன்மராச
தாதனைத் துகை பாதா நமோ நம
நாத சற்குரு நாதா நமோ நம
ஜோதியிற் ஜகஜோதி மஹா தேவா — தம்பிரானே

353

(353) பெஹாக ($7\frac{1}{2}$) ($\frac{1}{2}+2+4$)

கடலை பயறொடு துவரை எள அவல் பொரி
சுகியன, வடை, கனல, கதலி இனமுதொடு
கனியு முது பல கனி வகை நயமிசை — இனிதாகக்

கஷ்டப்பட்டு அலைகின்ற, மிக்க கோபமும், ஈயாமைக் குணமும் (34)
வாய்ந்தவனை, (வீடு) விருதல் பட்டு - அழிவு பட்டு அலைகின்ற, (கோமளை)
களித்து விளையாடும் வீண் பொழுது போக்குபவனை. உலகப் பற்றுகள்
கனிற சிகக்குண்டு வாழ்பவனை (நீ) ஆண்டருளுதல் எந்த நாளோ? -
ஆட்கொண்டு அருளும் ஒரு நாள் எனக்குக் கிட்டுமா என்றபடி.
ஆதி மூர்த்தியே! சற்குண மூர்த்தியே! பரிசுத்த மூர்த்தியே! நமோ நம
(உன்னை வணங்குகின்றேன, வணங்குகின்றேன) பொன்மயமான
முத்தலைச் சூலாயுதனை நமோ நம, யாதுகாத்தருள காவல் தெய்வமே
நமோ நம, (உந்தி) கடலில் ஆமையாகச்
சென்ற திருமாலுக்கு பிரியமானவனே நமோ நம. ஞானப் பொருள்
நிறைந்த முத்தமிழ் வல்ல இனியனே நமோ நம, வேதம் வல்ல
பிரமனுக்கு எட்டாத அருமையனே நமோ நம, அம்பலத்தில் ஆடும்
தோதித்திமிதீதா என நடனமாடுபவனே நமோ நம, வேதங்களில்
ஓதப்படும் அழகிய ரூபனே நமோ நம; (கோபம்) ஆக்குநிலை யில்லாதவர்
துதிக்கும் சாமியே நமோ நம, தருமராஜனும் எமன் (அனுப்ப வந்த)
தூதனும காலனை உதைத்து அழிக்க வல்ல (அல்லது அழித்த) திரு
வடிகளை உடையவனே நமோ நம, தலைவனே சற்குருநாதனே
நமோ நம; ஜோதிகளுக்குள ஜகஜோதியே, மழைதேவர் தம்பிரானே

353

கடலை, பயறு இவைகளுடன துவரம் பருப்பு எள், அவல், பொரி,
சுகியன், வடை, (கணலை) கரும்பு, வாழை இனிய அமுதுபோன்ற சுவை
யுடனே பழுத்துள்ள முதிர்ந்த பல பழ வகைகள அல்லது பலாப்பழ
வகைகள், நல்லபடி இவைகளை தின்பதுடனே

கடல கொள புவிமுதல் துளிரொடு வளமுற
அமுது அதி சுகயில் மணமது கனி பெற
கருணையுடன் அன்ளி திருவருள மகிழ்வுற நெடிதான

குடகு வயிறினில் அடைவிடு மதகரி
பிறகு வரும் ஒரு முருக சண்முக என
குவிய இருகர,மலர் விழி புனலொடு பணியாமல்

கொடிய நெடியன அதிவினை துயர் கொடு
வறுமை சிறுமையின் அலைவுடன், அரியவர்
குழியில முழுகியும அழுகியும் உழல்வகை ஒழியாதோ

நெடிய கடலினில் முடுகியெ, வரமுறு
மறலி வெருவுற, ரவி, மதி பயமுற,
நிலமு நெறு நெறு நெறு என வரும் ஒரு கொடிதான
நிசிசர் கொடுமுடி சட சட சட என
பகர கிரிமுடி கிடு கிடு கிடு என
நிகரில அயில், வெயில் எழு பசுமைய நிற முனைதான
நடனமிடு பரி துரகத மயிலது
முடுகி கடுமையில் உலகதை வலம வரு
நளின பத, வர நதி குமுகும என முநிவோரும்

கடலால் சூழப்பட்ட பூமியில் உள்ளோர் முதல் யாவரும் தழைத்து வளப்பம்பெற அமுதாகத் தனது துதிகளையில மனம் மகிழ்ச்சி பெற (உலகின் மாட்டுக்) கருணை வைத்து, அள்ளி எடுத்துத் தனது திருவருளைப் பாலிக்க மகிழ்ச்சியுடனே, பெரிதாயுள்ள

*குடகு - குடம் போன்ற - பரிகசிக்கத்தக்க தன் வயிற்றினில் அடைக்கின்ற மதயானை போன்ற கணபதியின் பின் தோன்றி வந்த ஒப்பற்ற முருகனே! சண்முகனே! என்று இரண்டு கரங்களும் (மேலே) குவிய, மலர்ந்த கண்ணினின்றும நீர் பெருக (உன்னைப்) பணியாமல்

கொடிதானதும், பெரிதானதும் ஆன மிக்க வினைத் துயருடன் (தலை விதியால் ஏற்பட்ட வினையால் வரும் துக்கத்தை அடைந்து) வறுமையால் வரும இளைப்புத்தின - தாழ்வினால் அலைச்சலடைந்து மாதர் குழியிலே முழுகியும், அதிலே அழுகியும - பாழடைந்தும் - திரிகின்ற குணத்தின் தன்மை என்னை விட்டு நீங்காதோ!

பெரிய கடல் போல (முழங்கிய) விரைந்து எழுந்து, (உயிர்களைக் கொண்டு போகும) வரம பெற்ற யமன் பயப்படவும், சூரியனும், சந்திரனும் பயப்படவும் பூமியும் நெறு நெறு நெறு என்று அதிர வந்த ஒரு கொடியவர்களான அசுரர்களின் கொடிய தலைகள் சட சட சட என்று முறிய, அழகிய மலைகளின் சிகரங்கள் கிடு கிடு கிடு என்று அதிர்ச்சியுற, ஒப்பில்லாத *வேலாயுதத்துடனே, ஒளி வீசும் பச்சை - நிறமுள்ளதும்

நடனம் செய்ய வல்லதுமான வாகனமான குதிரை போன்ற மயிலை வேகமாகச் செலுத்தி, உக்ரத்துடனே உலகை வலம் வந்த தாமரையன்ன (பத) திருவடிகளை உடையவனே! கங்கை குமு குமு என்று கொந்தளிக்க முநிவர்களும

நறிய மலரொடு ஹர ஹர ஹர என
அமரர் சிறை கெட, நறை கமழ் மலர் மிசை
நணியெ சரவணம் அதில் வளர் அழகிய பெருமானே.

354 நட பைரவி (3) 354 (4) 13

கருப் புற்று ஊறிப் பிறவாதே
கனக்கப் பாடு உற்று உழவாதே
திருப் பொற் பாதத்து அநுபூதி

சிறக்கப் பாலித்து அருள்வாயே
பரப்பு அற்றுக்கு உரியோனே
பரத்து அப்பாலுக்கு அணியோனே

திருக்கைச் சேவற் கொடியோனே
ஜெகத்திற் ஜோதிப் பெருமானே

355 ஆரபி (13) 355 அ 1900

கருபயைிற சுக்கிலத்து உருத்து உற்பவித்து மறுகாதே
கபடு அசுட்டர்க்கு இதத்த சித்ரத் தமிழ்க்கள் உரையாதே

விருப்பமுற்றுத் துதித்து எனப் பற்றெனைக் கருது நீயே

சரவணப் பொய்கையில் வளர்ந்த அழகிய பெருமானே

354

கருவிலே - பிறப்பிலே ஆசை ஊறி (நான்) பிறவாமலும்
மிகவும் கஷ்டங்களை வருத்தங்களை அடைந்து உழலாமலும்
திரு - முத்திச் செல்வமாம் (உனது) அழகிய திருவடி (அநுபவச்) சிந்தனையை (நினைவு விருப்பத்தை)
(நான்) சிறப்புற (எனக்குப்) பிரசாதித்து அருள புரிவாயே
(பரம்) ஆசை பெருக்கு அற்ற (பெரியார்க்கு) உரியவனே
மேலானதாய் யாவற்றையும் கடந்து அப்பால் உள்ள இடத்துக்கு
அருகில் உள்ளவனே
திருக்கரத்திற் சேவற் கொடியை கொண்டவனே
உலகிலே ஜோதிப் பொருளாம் பெருமானே.

355

கருப்பையிலே சுக்கிலத்திலே அலைப்புண்டு தோன்றிக கலங்காமலும்
வஞ்சனை கொண்ட மூடர்களிடம் (இதத்த) இன்பம் தருவதான
அழகிய தமிழ்ப்பாடல்களைச் சொல்லாமலும்
(நீ நினைத்தால் ஊழிய நான் உன்னைப் பற்ற மாட்டேனெ தவிறுவ்)
'ஆசையுடனே துதித்து என்னைப் பற்றுவாயாக" என்று என்னைக் குறித்து (கருது நீயே) நீயே நினைக்க வேண்டுகின்றேன்.

வெளிப்படப் பற்றிடப் படுத்தத் தருக்கி   மகிழ்வோனே

பருப்பதத்தைத் தொளைத்த சத்திப் படைச்   சமரவேளே
பணிக்குலத்தைக் கவாப்பதத்துக்கு அளித்த   மயிலோனே

செருப்புறத்துச் சினத்தை முற்றப் பரப்பும்   இசையோனே
தினைப்புனத்துக் குறத்தியைக் கைப்பிடித்த   பெருமானே

356

(356) பாகேஸ்ரீ   (18)   I7I7UU (ஸ) ($1\frac{1}{2}$+2+$1\frac{1}{2}$+2)+7+2+2

கவடு கோத்து எழும் உவரி மாத் திரள்
காய், வேல் பாடேன் ஆடேன், வீடாளது   கூடக்

கருணை கூர்ப்பன, கழல்கள் ஆர்ப்பன
தாவ மேல் வீழேன், வீழ்வார் கால் மீதிலும்   வீழேன்

தவிடின் ஆ பதம் எனினும், ஏற்பவர்
தாழாது ஈயேன், வாழதே சாவது   சாவத

அடியார்கள் முன்பு வெளிப்படவும், (பற்றிட) அவர்களை ஏற்றுக் கொள்ளவும் (படுத்த) அவர்களை ஆட்கொள்ளவும் (தருக்கி) களித்து மகிழ்பவனே.

(அல்லது) என்னைப்பற்றுவாயாக எனக் (கருதும் நீயே) கருத்துக் கொண்ட நீயே, என்முன் வெளிப்படவும், என்னை ஏற்றுக் கொள்ளவும், என்னை ஆட்படுத்தவும், களிப்புடன் மகிழ்ந்தவனே (என்னை ஆட்கொள்ளக் கருதி என்னை ஆட்கொண்டு மகிழ்ந்தவனே)

கிரவுஞ்சகிரியைத் தொளைத்த சத்திவேற்படை ஏந்திய போர்வேலனே

பாம்பின் கூட்டங்களைத் தனது பிரிவு கொண்ட பாதத்திற் பிணித்துள்ள (பாதத்தாற் கட்டி அகப்படுத்தியுள்ள) மயிலோனே

போர்க்களத்திலே கோபத்தை முற்றிலும் விரித்துக்காட்டிய புகழாளனே

தினைப்புனத்திலே குறத்தி வள்ளியைக் (கைப்பிடித்த) பாணிக்கிரகணம் - திருமணம் செய்து கொண்ட பெருமானே

356

(கவடு) மரக்கிளைகளைக் (கோத்து எழும) நிரம்பக் கொண்டு எழுந்ததும் (உவரி) கடலில் தோன்றி நின்றதுமான (மரா) மாமரமாக நின்ற சூரனது (திறல) வலிமையைக் காய்ந்து அழித்த உனது வேலாயுதத்தைப் பாடுகின்றேன் இல்லை, (அதைத் துதித்து ஆடுகின்றேன் இல்லை, வீடுபேற்றினை அடைய விரும்பி கருணை மிகக்கதும், கழல்கள் ஒலிப்பதும் ஆன உனது திருவடியின் மீது வீழ்ந்து வணங்குகின்றேன் இல்லை; அப்படி வீழ்ந்து வணங்குபவர்களின் கால்களிலும் வீழ்ந்து வணங்குகின்றேன் இல்லை

(தவிடின் அரா) தவிடளவு (பதம) சோறு கூட ஏற்பவர்க்குத் (தாழ்க்காது) தடையின்றிக் கொடுக்க மாட்டேன், இங்ஙனம் வாழாமல (வாழ்வதை விட) இறந்து படுதலே (சால) மிகவும்

அவடு பார்தது,அட வரு,கராத் தலை
தாளாமாரே தான் ஹா நாரா யணனே, நற

துணைவ, பாற்கடல் வனிதை சோபப
துழாய மார்பா கோபாலா காவா எனவே, கைக்

குவடு கப்பிட,உவணை மேற,கன
கோடு உனதா வானே போதான்யான் மருகோனே

குவிசு பாாத்தியன் உலகு காத்தருள
கோவே தேவே வேளே வானோ பெருமானே

357

(357) சங்கராபரணம (10½) ம (½+½+1+½+2+3)
காதி மோதி வாதாடு நூல கற றிடுவோரும்
காசு தேடி ஈயாமல வாழவ பெறுவோரும்
மாது பாகர் வாழ்வே எனை நெக்கு உருகாரும
மாறிலாத மா காலன் னூர் புகுகு அலைவாரே

(தரம) மேயானதாம் [உம் அசைநிலை] - தகுதியாம ; (கினி மோகமும)
கினியேனும மோகத்தை (பிறப்பினின்றும் விடுதலையை அடைந்து)
(என ஆகனை) என் உடல் (சதா) எப்போதும் (அமாறே) நிலை பெற்றி
ருக்குமாறே, நாதனே நீ தான் அருள் புரிவாயே.

(நீரில யானையின் காவ) நிழலைக் கண்டு (அட வரு) அடுதற் பொருட்டு-
கொல்லுதற் பொருட்டு வந்து இழுத்த, (கரா) முதலையின் தலை பொடி
யாகும்படி - (ஆ) ஹா! நாராயண மூர்த்தியே! நற் பெருந்
துணைவனே! பாற்கடலில் தோன்றிய மாது இலக்குமியின (சேர்ப்பு)
தலைவனே! துளசி மாலை அணிந்த மாயவனே! கோபாலா! காத்
தருளுக என்று (கை) துதிக்கையை உடைய
மலைபோன்ற கஜேந்திரன எனும யானை கூச்சலிட்டு அழைக்க - (உவணி)
கருடன மேல (கன கோடு) தங்க மயமான சங்கத்தை (ஊதர) ஊதி
(வானே போது) ஆகாய வழியாக வந்து (அன்வான) அந்த யானையை
ரட்சித்து ஆண்ட திருமாலின் மருகனே!
குலிசாயுதம் - வஜ்ராயுதத்தை ஏந்திய அரசன இந்திரனுடைய
பொன்னுலகைக் காத்தருளின தலைவனே! தேவனே! செவ்வேனே!
தேவர் தம் பெருமானே

357

(காதி) வெட்டுதல போற் பேசியும், தாக்கியும், வாதம செய்வதற்கு
(தாக்கம் செயவதற்கு) உரிதான நூலகளைக் கற்பவர்களும்
பொருளைத் தேடி, ஒருவருக்கும் கொடாது வாழ்க்கை செலுத்துபவர்களும்
உமை பாகராம் சிவபெருமானது செல்வமே என்று உன்னைப் புகழ்ந்து உள்ளம் உருகாமல் ஆகளும்
(மாறு இலாது) நீங்குதல இல்லாது பெரிய யம புரியிற் புகுந்து அலைச்சல்
உறுவார்கள்

நாத ரூப மாநாதர் ஆகத்து உறைவோனே

நாகலோகம் ஈரேழு பாருக்கு உரியோனே

தீது இலாத வேல் வீர, சேவற் கொடியோனே

தேவ தேவ தேவாதி தேவப் பெருமானே

---

(358) பெஹாக 358 (7) (-) (4½+½+½+½)

குகையில நவநாதரும, சிறந்த
முகை வனச சாதனும், தயங்கு
குணமும், அசுரேசரும், தரங்க முரல் வேதக
குரகத புராரியும, புரகண்-
மரகத முராரியும, செயங்கொள
குலிசகை வலாரியும, கொடுங்கண அறுநாலும்

அகலிய புராணமும், ப்ரபஞ்ச
சகல கலை நூலகளும பரந்த
அருமறை அநேகமும் குவிந்தும் அறியாத
அறிவும் அறியாமையும் கடந்த
அறிவு திருமேனி என்று உணர்ந்து உன
அருண சரணாரவிந்தம என்று அடைவேனோ

ஒலி வடிவாக விளங்குபவனே! சிறந்த தலைவராகிய சிவ பெருமானது (அகத்து) உள்ளத்தில் உறைபவனே! [மா நாத ராகத்து சிறந்த ஒலிகளை எழுப்பும ராகங்களில் - இசைப் பண்களில்-பொலிந்து விளங்குபவனே
சுவர்க்க லோகம் முதலிய பதினாலுலகங்களுக்கும் உரிமைக்காரனாய்-
தலைவனாய் நிற்பவனே
தீமையே செய்யாத (அல்லது) குற்றமில்லாத ஞானமாகிய வேலை ஏந்தும் வீரனே! சேவலங் கொடியுடையவனே!
தேவ தேவனே! தேவாதி தேவர்களுக்கெல்லாம் பெருமானே!

358

குகையில் வாசம் செய்யும் நவநாதர்களும், சிறந்த தாமரை மொட்டில் (ஜாதனும்) தோன்றிய பிரமனும், தெளிந்துள்ள முக்குணங்களும், அசுரர் தலைவர்களும், கடல் போன்ற வேதத்தை (திரிபுரத்தை எரித்த அந்த நாளில்-தேரில்)
குதிரையாகக் கொண்ட திரிபுர சம்ஹார மூர்த்தியாம் சிவனும் பச்சை நிறம் கொண்டவரும், முரன் என்னும் அசுரனை அழித்தவரும் ஆகிய திருமாலும், வெற்றி பெற்ற குலிசாயுதத்தைக் கையிற் கொண்டவனும, (வலாரி) வலன் என்னும அசுரனை அழித்தவனுமான இந்திரனும, கடுமையான விதிகளை-திட்டங்களை விதிக்கும் தரும சாஸ்திர நூலகளும் விரிவான புராணங்களும், உலகிலுள்ள சகல கலை நூலகளும், விரிந்துள்ள அரிய மறை நூலகள (வேதம முதலிய மறை நூல்கள்) பலவும் ஆக இவையெல்லாம ஒன்று கூடிச் சேர்ந்து முயன்றும் அறிய முடியாத
அறிவு அறியாமை இரண்டையும கடந்த அறிவு எதுவோ அதுவே உனது திருமேனியாகும என நான உணர்ந்து, உனனுடைய சிவந்த தாமரையன்ன திருவடியை என்று சேர்வேனோ

பகை கொள் துரியோதனன் பிறந்து
படை பொருத பாரதந் தெரிந்து
பரியது ஒரு கோடு கொண்டு சண்ட வரை மீதே
பழுதற வியாசன் அன்று இயம்ப,
எழுதிய விநாயகன், சிவந்த
பவள மத யானை பின்பு வந்த முருகோனே
மிக்க தமர சாகரம் கலங்க
எழு சிகர பூதரங் குலுங்க
விபரீத நிசாசரன் தியங்க அமராடி
விபுதர் குல வேழ மங்கை துங்க
பரிமள படீர கும்ப விம்ப
ம்ருகமத பயோதரம் புணர்ந்த பெருமானே.

---

(359) அடாணா (5½) 359 ½+½+1+1½

குருதி தோலினால் மேவு குடிலில, தங்கும் ஆவி
குலைய, ஏமனால் ஏவி விடு, காலன
கொடிய பாசம், ஓர் சூல படையினோடு, கூசாது
கொடுமை நோய் கொடே மோதி எதிரா முன்

பருதி சோமன், வானோர், படி உள்ளோர்கள், பால ஆழி,
பயம் உறாமல் வேல் ஏவும் இளையோனே

பகைமை உணர்ச்சி கொண்ட துரியோதனன் பிறந்து படைகளுடன்
போர் புரிந்த பாரத வரலாற்றை அறிந்து, பருத்த தனது ஒற்றைக்
கொம்பைக் கொண்டு மிகப் பெரிய மலையாம் மேரு மலை மேலே

குற்றமற்ற வகையில் வியாச முனிவர் அன்று சொல்லி வர, எழுதின
விநாயகர், சிவந்த பவள நிறத்தைக் கொண்ட மதயானை ஆகிய
கணபதியின் பின்பு தோன்றிய குருகோனே

அதிக ஒலி செய்யும் கடல் கலங்கச், சிகரங்களைக் கொண்ட ஏழு மலை
களும் குலுங்கி அசைவுற, மாறுபாடான புத்தியைக் கொண்ட அசுரன்
(சூரன்) கலக்கமுறும்படிப் போர் புரிந்து

தேவர் குலத்திலே வந்து தோன்றியவளும், ஐராவதம் என்னும் யானை
யால் வளர்க்கப்பட்டவளும் ஆகிய தேவசேனையின் பரிசுத்தமான
தும், நறுமணம் கமழ்வதும், சந்தனம் அணிந்ததும், குடம் போன்
றதும், ஒளி கொண்டதும், கஸ்தூரி அணிந்ததுமான கொங்கையை
அணைந்த பெருமானே

359

ரத்தம் தோல், இவைகளால் ஆய குடிசையாகிய இவ்வுடலில்
(ஏதம் ஆம்) துன்பம்-கேடு அடைகின்ற இவ்வுயிர் (கலைய) நிலை கெட்டு
நீங்கும்படி, யமதர்மராஜனால் அனுப்பப்பட்டு வருகின்ற காலன (கூற்றுவன்)
கொடுமை கொண்ட பாசக்கயிறு, ஒப்பற்ற சூலப்படை இவையுடன் வந்து
கூச்சமில்லாமல், கொடிய துன்ப நோயைத் தந்து, (கோலி) வளைத்திழுத்து
எதிர்ப்பதன் முன்

சூரியன் சந்திரன், விண்ணுலகோர் (படி பூமி) மண்ணுலகோர்கள் திரு
பாற்கடலிற் பள்ளி கொண்டுள்ள திருமால் - ஆகிய இவர்கள் பயம் நீங்கி
இன்புற வேண்டி வேலாயுதத்தைச் செலுத்தின இளையவனே

பழுது உருத பாவாணா எழுத ஒணுத தோள வீர
பரிவினொடு தாளபாட அருள் தருவாய்

மருது நிறதாய வீழ வலி செய மாயன், வேய் ஊதி,
மடுவில் ஆனைதான் மூலம் என ஓடி

வரு முராரி, கோபாலர் மகளிர் கேள்வன், மாதாவின்
வசனமோ மறு கேசன மருகோனே

கருத ஒணுத ஞான ஆதி, எருதில் ஏறு காபாலி
கடிய பேயினொடு ஆடி, கருதார், வெங்

கனலில மூழ்கவே நாடி, புதல்வ. காரண அதீத
கருணை மேருவே தேவா பெருமாளே.

366

(360) வாசலைபதி (7½) (ம) 1½+1+2+3

கொடிய மத வேள கைக் கணையாலே
குறை கண் நெடு நீலக் கடலாலே
நெடிய புகழ சோலைக் குயிலாலே
நிலைமை கெடு மானைத் தழுவாயே

குறறம சிறிதும இல்லாத பாக்களைப பாடும் திறமை வாயந்த கவிமணி
களாலும எழுதுதற்கு (வருணிப்பதற்கு) முடியாத (அழகிய) திருத்
தோள்களை உடைய வீரமூர்த்தியே! அன்புடனே நான் உன திருத்தாள்
களைப் பாடும் படியான திருவருட்செல்வத்தை தந்தருள்வாய்.

மருத மரம் வேரற்று சிதறுண்டு விழும்படி (வலி செய) தன் வலிமையைக்
காட்டின மாயவன், புல்லாங்குழல் வாசிப்பவன், நீர் நிலையில் நின்ற
ஆனையானது ஆதி மூலமே என்று ஓலமிட்டு அழைக்க, ஓடி
வந்த திருமால, இடை மகளிர்களின கணவன், தாயார் கைகேயியின்
சொல்லை மறுக்காமல (காட்டுக்குச் சென்ற) கேசவன் ஆகிய
விஷ்ணு மூர்த்தியின் மருகோனே

எண்ணுதற்கு அரிய ஞான மூர்த்தியாம ஆதிதேவர், இடபத்தில் ஏறுபவர்,
கபாலத்தைக் கையிற கொண்டவர், கடுமை வாயந்த பேய்களுடனே
ஆடுபவர், (கருதார்) தன்னை மறந்து (சிவ பூஜையைக் கை விட்ட) திரிபு
ரத்திலிருந்தோர் யாவரும் (தமது புன்சிரிப்பாம், கொடிய
நெருப்பில் முழுகும்படி நாடினவர் ஆகிய சிவபெருமானுடைய
புதல்வனே! காரணங்களுக்கு மேற்பட்ட நிலையினனே! கருணை
பெருமலையே! தேவர் தம பெருமானே!

கொடிய, செருக்குள்ள மன்மதனின் கை செலுத்துகின்ற பாணங்களாலும்
ஒலித்தலுக்கு (தண்) இடமான- ஒலிக்கின்ற - நெடிய நீல நிறக் கடலாலும்
பெரிய புகழ் பெற்ற சோலையில உள்ள குயிலாலும்
தனது நிலைமை(சுய அறிவு) தடுமாறுகின்ற மான போன்ற இந்தப் பேதையை
அணைந்தருள்வாயே

கடிக்கின்ற குணத்தை உடைய பாம்பை ஆபரணமாக அணிந்துள்ள
சிவபெருமானுக்கு இனியவனே
சகல கலைகளும் தெரிந்த சிறந்த உண்மைப் புலவனே!
அடியவர்களுடைய அன்பில உறைவிடம் கொண்டுள்ள வேலனே
ஆறு திருமுகங்களை உடைய அதிசயப் பெருமானே

சந்தனம் அணிந்து,(சந்தம) அழகு சிறந்த, குளிர்ந்த கொங்கை
களை உடைய வஞ்சிக் கொடி போன்ற பெண்ணும் மனையவ
ரும்
(என்னை) பற்றுக்கோடாகக் கொண்டு (துணையாகக் கொண்டு), கொஞ்சி
ஒலிக்கும சதங்கை அணிந்துள்ள பாதங்களை உடைய குழந்தைகளும்
ஆக இவர்களை என்னுடைய செல்வங்கள் என்றென்று அடிக்கடி மனத்
திலே எப்போதும் புகழ்ந்து கூறி, மிக நன்றாக வாழ்கின்ற
(இந்த நிலையிலா) இன்பத்தை நீக்கி, எனது துன்பங்கள் எல்லாம்
அடங்கி ஒழிய, இன்று உனது திருவடிகளை தந்தருள வேண்டும்.
பூங்கொத்துக்களை உடைய கடப்பமாலையைச் செவ்விய குளிர்ந்த
புயங்களில் அணிந்து கொண்டு அழகிய மலையிடங்களில் வீற்றிருப்பவனே
வாசனை கொண்ட மலைக் கொல்லை (செய்) வயல்களில் இருந்த
(மின்) மின்னல் போன்ற ஒளி கொண்ட வள்ளியைக் கண்ட கந்தனே!
கிரவுஞ்ச மலையைப் பிளந்த ஒளி வேலனே!
மெய், வாய், கண், மூக்கு, நாசி எனப்படும ஐந்து பொறிகளையும்
ஜெயித்து இருக்கும் அன்பர்களுடைய உடலிற் பொருந்தி
விளங்கும் அழகோனே!

கடி அரவு பூணர்க்கு இனியோனே

கலைகள் தெரி மாமெய்ப் புலவோனே
அடியவர்கள் நேசத்து உறை வேலா
அறுமுக விநோதப் பெருமானே

(561) அமிர்த வர்ஷணி (8) (ம) ஆதி

சந்தம் புனைந்து சந்தம் சிறந்த
தண் கொங்கை வருசி மனையாளும்
தஞ்சம் பயின்று கொஞ்சுஞ் சதங்கை
தருகும் பதங்கள் இனோரும்
எனதன் தனங்கள் என்றென்று நெஞ்சில்
என்றும் புகழ்ந்து மிக வாழும்
இனபம் களைந்து துன்பங்கள் மங்க
இன்று உன் பதங்கள் தர வேணும்
கொந்தின் கடம்பு செந்தண் புயங்கள்
கொண்டு அங் குறிஞ்சி உறைவோனே
கொங்கின் புனம் செய மின் கண்ட கந்த,
குன்றம் பிளந்த கதிர்வேலா

ஐந்து இந்த்ரியங்கள் வென்று நனறும் அன்பர்
அங்கம் பொருந்தும் அழகோனே